மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 7 சுற்றம் : 4 / ஏப்ரல் 2019 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-



## திரை வரலாற்றில் உதிராப் பூ
## இயக்குநர் மகேந்திரன்



## மோடியின் அமைச்சரவையே மக்களாட்சிக்கு எதிரானது



வாக்களிப்பீர்
உதயசூரியன்
சின்னத்திற்கு!
தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர்
கனிமொழி அவர்களை வெற்றிபெறச் செய்வோம்!
ஆண்டவரின் பிள்ளைகளுக்கு
அரசியல் உரிமைகள்
கேப்டன் இராஜன், தென்மண்டலச் செயலாளர்
பேச: +91 8220110226
அறநெறி மக்கள் கட்சி
தூத்துக்குடி மாவட்டம்

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly April 2019

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**மவுண்ட் கோபால்**
**அ.வெற்றிவேந்தன்** எம் .ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** எம்.ஏ.,
**சரவணன்** பூவிருந்தவல்லி
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே.பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
சைதை **சு.மணிமாறன்**
**எஸ்தர்ரோஸ்லின்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

திரை வரலாற்றில் உதிராப் பூ
இயக்குநர் மகேந்திரன் (தலையங்கம்) ....................4

அமெட் பல்கலைக் கழகத்தில்
பல்வேறு வாய்ப்புகளைத் தேடித்தரும் புதிய படிப்பு
பேரா. ஜா. ஆரென் கிளென்.................... 6

ஒரு வங்காளியின் பார்வையில் பேரறிஞர் அண்ணா.................... 8

சிறுகதை : நல்லமனசு
– இருங்கோவேள் ....................10

மோடியின் அமைச்சரவையே மக்களாட்சிக்கு எதிரானது
– மவுண்ட் கோபால்.................... 12

ஜெனிவா நடைபெற்ற ஐ.நா. கூட்டத்தொடரில்
எம்.எல்.ஏ., கருணாஸ் உரை ....................14

பெண்களின் மாதவிடாய் கோளாறுகள்
– மருத்துவர் வி. ஹேமாவதி.................... 15

சிறுமி சித்ரவதை இந்து பாரத் சேனா?
– மே பதினேழு இயக்கம்.................... 18

மனுவாத கைக்கூலிகள்
–இராஜாசிங்.................... 19

மாற்றத்தை உருவாக்க வாக்களிப்பீர்
– காந்தியவாதி சசிபெருமாள் ஆதரவு.................... 22

அ.தி.மு.க.கூட்டணி
– மவுண்ட் கோபால்.................... 23

விண்வெளியை ஆயுதமாக்க நாங்கள் விரும்பவில்லை!
– வி.கே. சரஸ்வத் பேட்டி.................... 26

விடுதலைப் புலிகளை இதற்காகத்தான்
30 நாடுகள் சேர்ந்து வீழ்த்தினார்கள் ....................28

குறுங்குழுவாதிகள் – பாசிஸ்டுகள் என்று
எங்களை தூற்றிய எட்டறிவு ஜீவன்களுக்கு....................31

மருத்துவம் : வேண்டியவை – வேண்டாதவை
– உமாமகேஸ்சுவரி....................33

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. *– ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



தமிழ்த் திரை உலகின் வரலாறு ஒருவரைப் பற்றிச் சொல்லாமல் நிறைவுபெறாது என்றால், அவர், இயக்குனர் திரு. மகேந்திரன் அவர்கள்தான். நடிகர் திலகத்தின் தங்கப்பதக்கத்திற்கு கதை வசனம் எழுதியவர். கோகிலா, ஆடுபுலி ஆட்டம் படங்களுக்கு வசனம் எழுதியிருக்கிறார். உதிரிப்பூக்கள், முள்ளும் மலரும், பூட்டாத பூட்டுகள், மெட்டி, நெஞ்சத்தைக் கிள்ளாதே, அழகிய கண்ணே, ஜானி, காளி, நண்டு போன்ற படங்கள் இவரது புகழைப் பறைசாற்றக் கூடியவை. புகழ் பெற்ற எழுத்தாளர் புதுமைப்பித்தனின் சிற்றன்னை என்கிற சிறுநாவலைத் தழுவி உருவாக்கப்பட்ட உதிரிப்பூக்கள், திரைப்படக் கலையை பயில விரும்பும் மாணவர்களுக்கு முதன்மைப் பாடமாக இன்றளவும் திகழ்கிறது.

உலக திரைப்பட அரங்கில் தமிழ்த் திரைப்படத்தை வியந்து பார்க்க வைத்தவர்களின் மகேந்திரன் அவர்கள் முதன்மையானவர். அவரது மறைவு தமிழ்த் திரையுலகிற்கு தாங்கிக் கொள்ள இயலாத இழப்பு என்றே சொல்லலாம். அவர் படைப்பாளி மட்டுமல்லர். சிறந்த உணர்வாளர். மண்ணைப் போற்றுபவர்.

2002 ஆம் ஆண்டு, தமிழீழ தேசியத்தலைவரை சந்தித்த இயக்குனர் மகேந்திரன் அவர்கள் ஒரு வார இதழுக்குத் தந்த கட்டுரை:

*திடீரென்றுதான் அழைப்பு. ரொம்ப நாளாக நின்றுபோயிருந்த சாசனத்தின் இறுதிக்கட்ட வேலை களில் இருந்தேன். தமிழீழத்தில் சினிமா பற்றி ஆர்வமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு சினிமா பற்றிச் சொல்லி, ஒரு படமும் தயாரித்துத் தரவேண்டும் வரமுடியுமா? என்று கேட்டார்கள். மறுவார்த்தையாக மறுப்புச்சொல்லாமல் சம்மதித்தேன். அருமையான மூன்று மாதங்கள். அங்கேயிருந்து 1996 என்ற அவர்களின் வாழ்க்கை சார்ந்த சினிமாவை எடுத்துக்கொடுத்தேன். யாருமே முறைப்படி அனுபவம் பெற்ற நடிகர்கள் கிடையாது. 1996ன் இறுதிக்கட்ட வேலைகளில் இருந்தபோதுதான், திடீரென்று எடிட்டிங் அறையின் வெளியே கார் வந்து நின்றது.*



*சினிமா, கலைப் பிரிவுக்குத் தலைமை வகிக்கும் சேரா என்னை அணுகினார். நீங்கள் அவசியம் அவரைச் சந்திக்க வேண்டும். அவரும் உங்களோடு கதைக்க விரும்புகிறார். இப்போதே நீங்கள் புறப்பட வேண்டும் என்றார்கள். அதற்கான ஏற்பாடுகள், விவரணைகள், பாதுகாப்பு, சிறிய பதட்டம், பரபரப்பு, ஆர்வம். நாம் சந்திக்கப் போகிறவர் யார் என்று புரிந்துவிட்டது. வேகம் பற்றிக்கொண்டது. சூழ்நிலை கெடுபிடி ஆகிவிட்டது. வழியெங்கும் தம்பியின் படை பிரமாதமான கட்டுக்கோப்பு. உங்களில் யாராலும் யூகிக்க முடியாத இடத்தை நோக்கிய பயணம். சேரா என்னிடம் மெல்லிய சிரிப்போடு, பேசிக்கொண்டே வந்தார். தலைவர் உங்களின் உழைப்பைப் பற்றி விசாரித்தார். சந்தோஷப்பட்டார். பார்க்க வேண்டும் என்று விரும்பினார். இந்த விருப்பம் சாதாரணமானதல்ல என்று பேசிக்கொண்டே வந்தார். எனக்கு ஒன்றுமே நிலை கொள்ளாமல் தவித்தேன். உலகத் தையே தன் பக்கம் பார்க்க வைக்கிற மாபெரும் தலைவன். அவரையே சந்தித்துப் பேசப் போகிற பேரனுபவம். அதை எப்படி நாம் உள்வாங்கப் போகிறோம் என்றெல்லாம் சிந்தனைகள்.*

# திரை வரலாற்றில் உதிராப் பூ
# இயக்குநர் மகேந்திரன்

*திடீரென்று அடுக் கடுக்கான விசாரணை கள். பாதுகாப்பு குளறு படி இல்லாத கம்பீர மான விசாரணை.*



இருப்பிடம் நெருங்கப்போகிறோம் என்று தெரிந்து விட்டது. சேராவிடம், நான் அவரை எப்படிக் கூப்பிடு வது. சார் என்றா, அல்லது வேறு முறையிலா? என்று, போட்டோக்களில் பார்த்திருந்த அவரின் கம்பீரத்தை நினைவுபடுத்திக்கேட்டேன். நீங்கள் அவரைத் தம்பி என்று அழைத்தால் பிரியப்படுவார். நாங்கள் எல்லாருமே அவரை எங்களுக்குள் அழைக் கும் விதம் அதுதான். ஒன்றும் பயப்பட வேண்டாம் என்றார். நான் பயப்படவில்லை. பெருமிதப்பட்டேன்.

அந்த இடமும் வந்தது. அரசியல் பிரிவுத்தலைவர் தமிழ்ச்செல்வன் வெள்ளைச் சிரிப்போடு எங்கிருந்தோ பிரசன்னமானார். என்னை வரவேற்று, அவர் இருக்கிற அறைக்கு அழைத்துப்போனார். நான் எப்படி அந்தக் கதவைத் திறப்பது என்று கணநேரம் திகைத்தபோது, மெல்லத் திறந்தது கதவு. வர்ணிக்க முடியாத கம்பீரத்தில் என்னை வணங்கினார் பிரபாகரன், என்னால் அவரை ஐயா என்றுதான் அழைக்க முடிந்தது.

என்னை இருக்கையில் அமர்த்திய பிறகே உட்கார்ந்தார். என் மனக்கதவுகளையெல்லாம் திறந்து உள்ளே போய்க்கொண்டேயிருந்தார் தலைவர். உருகிக்கரைந்து உள்ளே போய்க்கொண்டேயிருந்தேன். அன்போடு பேசத்தொடங்கினார் தம்பி. நாங்கள் உறக்கம் இல்லாமல், சதா விழித்துக்கொண்டேயிருக் கிறோம். என்றால், நீங்களும் ஏன் அப்படி இருக்க வேண்டும்? உழைக்கிற நேரத்திற்குத் தகுதியாக நீங்கள் ஓய்வெடுக்கலாம் என்ற கரிசனத்தோடு ஆரம்பமானது பேச்சு. இரண்டு பேருமே ஐயா என்று விளித்துக் கொண்டோம். ராணுவம் எங்கள் நாட்டில் இளம் பெண்களைக் கற்பழித்தது. அப்படிக் கேவலப்படுத்தி யதை விட, தமிழ் சினிமா பெண்களை இழிவுபடுத்து கிறது என்று வருத்தத்தோடு பேசினார். கன்னத்தில் முத்தமிட்டால் எங்களைச் சரியான முன்னெடுத்து வைக்கவில்லை என்று சுட்டிக்காட்டினார். பாரதி ராஜா ஆய்த எழுத்து படத்தில் நடித்திருக்க வேண் டியது அவசியம்தானா? என்று கேள்வி எழுப்பினார்.

தமிழ் சினிமாவின் மீது அக்கறைப்பட்ட பேச்சை அப்படியே ஹாலிவுட் பக்கம் திருப்பினார் தம்பி. எனக்கு ஆச்சர்யம்...யார் இவர்! இவரின் பார்வைகள் என்ன? இப்படி ஒரு சின்ன தேசத்திலிருந்து உலகமே திரும்பிப் பார்க்க புறப்பட்டு வந்தது எப்படி? என்றெல்லாம் மனம் அலை பாய்ந்தது. ஹாலிவுட் படங் களும் திசை திரும்பியதைக் குறிப்பிட்டார். உங்களுக்கு ஹாரிசன் போர்டை பிடிக்குமா? என்று எனக்குப் பிடித்த அவரையே குறிப் பிட்டார். படக் காட்சிகளைத் தனித்தனி யாகப் பிரித்துப் பேசினார். எனக்கு 200 ஹாலிவுட் சி.டி.களைப் பரிசாகத் தந்தார். அரைமணி நேரத்திற்கு இருக்கும் என்று நினைத்திருந்த பேச்சு மூன்றரை மணி நேரத்திற்கு விரிந்தது. என்னோடு உண வருந்தினார். என்னை முழுமையாக விசாரித் தார் முள்ளும் மலரும் க்ளைமேக்ஸ் தன்னைப் பாதித் ததைக் குறிப்பிட்டார். உதிரிப்பூக்கள் அனுபவத்தைப் பகிர்ந்தார்.

நாங்கள் விடைபெறுகிற அந்தத் தருணம் வந்தே விட்டது. வாசல் வரைக்கும் வந்து வழியனுப்பினார். கடைசியாகப் பேசிக்கொள்கிற நிமிடங்கள் உன்னத மாக அமைய, கூடியிருந்த பாதுகாப்புகளை விலகியிருக் கச் சொன்னார். நீங்கள் அடுத்த முறையும் வருவீர்கள். ஆனாலும் யுத்தம் அப்போதும் நடக்கும், இருந்தாலும் உங்களைச் சந்திப்பேன். என்றார். அவரது பேரன்பின் அடையாளமாகச் சிறிய தங்கப்பதக்கத்தைக் கொடுத் தார். அவரோடு புகைப்படம் எடுத்துக் கொள் கிற விருப்பம் உடனே நிறைவேற்றப்பட்டது. திரும்பி வண்டியில் உட்கார்ந்தபோது சீருடை, துப்பாக்கிக ளோடு தலைவரின் அனுபவ சாந்தமும் மனசுக்குள் வந்தது.

கொழும்பு விமான நிலையத்தை வந்தடைந்தேன். என்னுடைய கைப்பையை வாங்கி, ஒரு சிங்கள அதிகாரி சோதனையிட்டார். அந்தப் பதக்கத்தைப் பார்த்த மறு விநாடி என்னை நிமிர்ந்து பார்த்து, புன்னகைத்து, உடனே கைப்பையை மூடி என்னை விமானத்தின் வாசல் வரைக்கும் வழி நடத்தினார். விமானத்தில் வந்து உட்கார்ந்து யோசித்தபோது..

சந்தித்த மூன்றரை மணி நேரமும் ஒரு வார்த்தை கூட பிரபாகரன் அரசியல் பேசவில்லை என்பது ஞாபகத்திற்கு வந்தது.

அவருக்கு எரிக் சோல்ஹம்மிடம் என்ன பேசவேண்டுமென்று தெரிந்திருக்கிறது. தமிழ்ச் செல்வனிடம் என்ன பேசவேண்டுமென்று தெரிந்திருக் கிறது. இந்த மகேந்திரனிடமும் என்ன பேசவேண்டு மென்று தெரிந்திருக்கிறது". **மகேந்திரன்.**

இயக்குனரின் மகேந்திரன் அவர்களது போற்றத் தகுந்த வாழ்க்கையை முற்றம் இதழ் காலமெல்லாம் கதைத்துக் கொண்டே இருக்கும்.

**ஆசிரியர்.**




# அமெட் பல்கலைக்கழகத்தில் பல்வேறு வாய்ப்புகளைத் தேடித்தரும் புதிய படிப்பு

அமெட் பல்கலைக்கழகத்தில் "சர்வதேச அரங்கில் கால் பதித்த பல்வேறு வாய்ப்புகளைத் தேடித்தரும்" புதிய படிப்பு.

B.Sc(Hons) - Robotics and Artificial Intelligence

மாறி வரும் நவீன உலகில் பல்வேறு தொழில் நுட்பத் துறைகள் வளர்ந்து வருகின்றன. நாம் இன்று வாழ்வது புதியதோர் யுகம். அறிவுத் திறத்தால் மானுடம் ஆயிரம் அதிசயங்கள் நிகழ்த்திக் கொண்டிருக்கிற யுகம். இந்த யுகம் தருகின்ற வளர்ச்சிக்கான வாய்ப்புகளும் பல.

சர்வதேச அரங்கில் புரட்சிகரமான படைப்பாற்றலுடன் மாணவர்கள் திகழ தமிழகத்தில் அமெட் பல்கலைக்கழகம் புதிதாய் இளங்கலை அறிவியல் B.Sc. (Hons) பட்டப்படிப்பு ரோபோட்டிக்ஸ் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் துறையை (Robotics and Artificial Intelligence) அறிமுகம் செய்கிறது. எம் மாணவர்கள் புவியினில் அறிவியல் வல்லுனர்களாக வலம் வர இந்த மூன்றாண்டு கல்வியில் இரண்டு ஆண்டுகள் அமெட் பல்கலைக்கழகம், சென்னையிலும் (AMET University, Chennai) இறுதியாண்டை எட்ஜ் ஹில் பல்கலைக்கழகம், இங்கிலாந்து நாட்டிலும் (Edge Hill University, United Kingdom) பயின்று அறிவு வளம்பெறும்படி கல்விப் பாடத்திட்டம் கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

### ரோபோட்டிக்ஸ் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் துறை சார்ந்த வாய்ப்புகள்

Deloitte என்கிற அமைப்பு உலக மனிதவள தேவையினை கணித்து 2018ல் அறிக்கை ஒன்றினை தாக்கல் செய்திருக்கிறது. அதில் ரோபோட்டிக்ஸ் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் (Robotics and Artificial Intelligence) துறையில் எழும் வேலை வாய்ப்புப் பற்றியும் அதற்கான தேவை பற்றியும் அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் இளம் தலைமுறையினர் இந்தத் துறை சார்ந்த கல்வியினை எப்படி கற்றறிய வேண்டுமென்றும் விளக்கியிருக்கின்றார்கள். அதில் ரோபோட்டிக்ஸ் மற்றும் Artificial Intelligence துறையில் பயிலப் போகிறவர்கள் தங்களுடைய ஆற்றல்களை புதியன கண்டுபிடிப்பதிலும், தீர்வு காண்பதிலும், உருவாக்குதலிலும் தங்களைத் தாங்களே ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதற்காகவும் பல்கலைக்கழகத்தில் தொழிற்சாலைகளுடன் தோழமைத் தொடர்பை மேம்படுத்தி மாணவர்

களுக்கு சிறப்பான பயிற்சிகள் நடத்துதல், தொழிற் சாலைகளில் நேரடியாகச் சென்று அங்குள்ள தேவைக்கேற்ப தங்கள் ஆய்வு வளத்தை அதிகப் படுத்தி அதற்கான தீர்வினைக் கண்டறிந்து புதிதாக வடிவமைத்தல் என படிக்கும் போதே திறன் மேம் பாட்டுக் கல்வியாக வழங்கப்படுகிறது.

பொதுவாக இந்தத் துறையில் சிறப்பம்சமாக உள்ள தொழில் வாய்ப்புகளாக உற்பத்தித்திறன் மேம்பாடு(Manufacturing), போக்குவரத்துத்துறை மேம்பாடு (Transport), சுகாதாரத்துறை மேம்பாடு (Healthcare), பாதுகாப்பு ஆராய்ச்சி (Research), இண்டஸ்ட்ரி 4.0 (Industry 4.0) மற்றும் பல்வேறு துறைகளில் ரோபோடிக்ஸ் மற்றும் செயற்கை நுண்ணறிவு(Robotics and Artificial Intelligence) துறையினுடைய தேவை இருக்கிறது. அதனிலும் குறிப்பாக USA, UK, Australia, Japan போன்ற நாடுகளில் இத்துறை சார் தேவைகள் அதிகமாகவே இருக்கிறது.

### ஏன் இந்தப் படிப்பு?

இன்று ரோபோடிக்ஸ் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் (Robotics and Artificial Intelligence) துறையில் எழும் தொழில் நுட்ப வளர்ச்சிகள் பல்வேறு புது வாய்ப்புகளை உருவாக்குகிறது. Data management and handling ஆகிய தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் Machine Learning மற்றும் தானியங்கி தொழில்நுட்ப வளர்ச்சிகள் வெகுவாக இன்று வளர்ந்து வருகிறது. பல்வேறு தொழில் வாய்ப்புகள் ரோபோடிக்ஸ் மற்றும் Artificial Intelligence தொழில் நுட்பத்தை முன்னிறுத்தி தான் சமீபத்தில் வளர்ந்து வருகிறது. அடுத்த தலைமுறை வேலை வாய்ப்புகள் முழுக்க முழுக்க தானியங்கி தொழில் நுட்பம் சார்ந்ததாகவே இருக்கப் போகிறது. மாறி வருகிற இந்த மாற்றத்தை நாம் ஏற்றுக் கொண்டால் மட்டும் தான் நம்மால் புதிய வேலைவாய்ப்புகளுக்கு நம்மை நாம் தயார் படுத்திக் கொள்ள முடியும். Artificial Intelligence, ரோபோடிக்ஸ் மற்றும் ஆட்டோமேஷன் ஆகிய புது துறைகள் இன்றைய வாழ்க்கைச் சூழலில் அனேக இடங்க ளிலும் விரைவாக வளர்ந்து வருகின்றது. இந்தத் துறை கல்வி என்பது இன்று வளர்ந்து வரும் புதுத் துறையாக இருப்பதால் ஏராளம் வேலைவாய்ப்பு களும், ஆராய்ச்சி படிப்புகளும் மிகுதியாய் நிறைந் திருக்கிறது. வருங்காலத்தில் ரோபோடிக்ஸ் என்பது தவிர்க்க முடியாத சக்தியாக உருமாறப் போகிறது என்பது நிதர்சனமான உண்மை. இப்படி யானதொரு காலகட்டத்தில் இதற்கான தேவையை பூர்த்தி செய்வதற்கான மாணவர்களை உருவாக் கவும், வரும் தொழில் வாய்ப்புகளில் மாணவர்களை ஆழமாகவும், நேர்த்தியாகவும் ஈடுபடுத்தி வெற்றி யைக் காணவும் இந்தப் படிப்பு உறு துணையாக அமையும். இந்தத் துறையின் வளர்ச்சியை நாம் நமது அன்றாட வாழ்வில் எல்லா இடங்களிலும் கண் கூடாகக் காண்கிறோம். இந்தத் துறையில் பெரிதாய் வரும் அரிய தொழில் வாய்ப்புகளில் ரோபோ வடிவமைப்பு நிபுணர் (Robotic Design specialist), ரோபோட் பயிற்சியாளர் (Robotic Trainer), ரோபோ மென்பொருள் பொறியாளர்/மேம்பாட்டாளர் (Software Engineer/Developer), செயற்கை நுண்ணறிவு நிபுணர் (Artificial Intelligence specialist) ஆகியவை நம் வணிகச் சந்தையில் பெருமளவு தேவைப்படுகிற வேலை வாய்ப்புகளாக இருக்கிறது. முன்னணி தொழில் நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்தவும், துல்லியமான, தரமான பொருட்களை உற்பத்தி செய்யவும் அதிகம் தானியங்கி இயந்திரங்களையும், மனித இயந்திரங்களையுமே (Robots) பயன்படுத்த விளைகின்றார்கள். இதனாலும் இந்தத் துறை ரீதியான வேலை வாய்ப்புகள் ஏராளம் பெருகியி ருக்கின்றன.

### எட்ஜ் ஹில் பல்கலைக்கழகம்

1885ல் தொடங்கப்பட்ட இங்கிலாந்தின் Edge Hill University, Liverpool, இங்கிலாந்து நாட்டின் தேசிய தரவரிசையில் முதன்மையான பல்கலைக்கழகம். குறிப்பாக Robotics and Artificial Intelligence படிப்பினை முதன்முதலாக உருவாக்கி, இன்று அதன் பட்டதாரிகள் உலகம் முழுவதும் மிகவும் வேண்டப்படுகின்றனர். பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு (Infrastructure), செய்முறைக் கூடங்கள் (Laboratory facilities) உலகத்தரம் வாய்ந் தவை. அத்தோடு இங்கே பட்டம் பெற்றவர்கள் அனைவரும் பல உலகளாவிய நாடுகளில் மிக உயர்ந்த சம்பளத்துடன் பணியாற்றி வருகிறார்கள்.

### எதற்கு அமெட் பல்கலைக்கழகம் மற்றும் எட்ஜ் ஹில் பல்கலைக்கழகம்

அமெட் பல்கலைக்கழகமும், எட்ஜ் ஹில் பல்கலைக்கழகமும் மனித இயந்திரவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் (Robotics and Artificial Intelligence) துறை கல்வியை உலகத் தரத்தில் மேம்படுத்தி வழங்குவதற்கு ஏதுவாக இரண்டு பல்கலைக்கழகங்களும் இணைந்த புரிந்துணர்வு ஒப்பந்தமும், தொழில் நுட்ப பங்குதாரராகவும் செயல்பட முன் வந்துள்ளார்கள். மேலும் இந்தத் துறை சார்ந்த வேலைவாய்ப்புப் பயிற்சியினை வழங்கவும் இந்த ஒப்பந்தம் மாணவர்களுக்கு வழிவகை செய்யும்.

பேராசிரியர். **ஜா. ஆரென் கிளென்** M.E., M.S., M.B.A., (Ph.D)

அமெட் பல்கலைக்கழகம், சென்னை.

மின்னஞ்சல் : aran@ametuniv.ac.in

●

# ஒரு வங்காளியின் பார்வையில் பேரறிஞர் அண்ணா



பாகிஸ்தானின் உருது ஆதிக்க ஆட்சியிலிருந்து கிழக்கு பாகிஸ்தான் விடுதலையடைந்து வங்கதேச மக்கள் குடியரசு என்ற நாடு 1971ல் உருவானபோது அரசியல் விடுதலை, பிரதேச எல்லை விடுதலை என்பதைத் தவிர, இன்னொரு வகையில் அந்த விடுதலை முக்கியத்துவம் பெற்றது. வெவ்வேறு தேசிய இனங்களைக் கொண்ட நாடுகளை ஒரே மதம் என்ற பிணைப்பு இணைக்கும் பசையாகச் செயல்படும் என்ற நம்பிக்கையைத் தகர்த்த விடுதலை அது...

தெற்காசிய மக்களை ஒரே நாடு என்றோ, இரு நாட்டவர் என்றோ கட்டுப்படுத்திவிட முடியாது. அவர்கள் பல தேசிய இனத்தவர் என்பதையே வங்கதேச விடுதலை நிரூபித்திருக்கிறது. பல தேசிய இனங்களுள்ள நாட்டில், பல்வேறு இனங்களி லிருந்து பல தந்தையர் உருவாகின்றனர். அப்படி உருவானவர்களில் முதன்மையானவர் அண்ணா என்றே நினைக்கிறேன். தமிழர்களின் தலைவர், இன்று பல்வேறு இன மக்களுக்கும் ஆதர்சமாகத் திகழ்கிறார். அண்ணா ஒரு மாநிலத்துக்கு, ஒரு இனத்துக்கு மட்டும் சொந்தமல்ல, உலக வரலாற்றில் இடம்பெற வேண்டிய தலைவர் என்பதை அவரது அரசியல் பணி உணர்த்துகிறது.

**இந்தியாவை காக்க அண்ணா வழியே உகந்தது**

இந்தியக் குடியரசின் ஜனநாயகமும் ஒற்றுமையும் அதன் கூட்டாட்சிக் கட்டமைப்பில்தான் வாழ்கின்றன. இதை உணர்த்திருந்ததால் தான் 1946ல் இந்திய சுதந்திரம் தொடர்பாக இறுதிசெய்ய, பிரிட்டனிலிருந்து வந்த கேபினட் அமைச்சர் களைக் கொண்ட தூதுக் குழு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் இருக்கும் கூட்டமைப்பாக இந்தியாவைச் சிந்தித்தது. மத்திய அரசுக்கு வெளியுறவுத் துறை, ராணுவம், ரூபாய் நோட்டு அச்சடிப்பு, தகவல் தொடர்பு, ரயில்வே போன்றவை மட்டும் பொறுப்புகளாக இருக்கும். ஏனையவை அனைத்தும் மாநிலங்களின் அதிகாரத்தில்! அதாவது, இப்போதைய ஐரோப்பிய ஒன்றியத்தை விடச் சற்றே நெருக்கமான நாடுகளின் கூட்டமைப்புக்காக இந்திய அரசு இருந்திருக்கும். அண்ணாவும் இதையே வலியுறுத்தினார்.

ஒரு வங்காளி என்ற முறையில் கூறுகிறேன். அண்ணா இப்போதும் வாழ்கிறார். ஆதிக்கவாதத்துக்கு எதிராக, தேசியம் போராட்டம் நடத்தும் போதெல்லாம் அண்ணா வாழ்வார். அண்ணா இன்னமும் வாழ்கிறார் என்று ஏன் கூறுகிறேன் என்றால், வங்காளியான என் மீது இந்தி படிப்பது கட்டாயம் என்று மத்திய அரசால் திணிக்க முடியவில்லை. 1965ல் அண்ணா தலைமை தாங்கி

நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டம்தான் இதற்கு முக்கியக் காரணம் அந்தப் போராட்டத்தால்தான் இந்தி பேசாத நாங்கள் அனைவரும் நிரந்தர மூன்றாம் தரக் குடிமக்களாகிவிடாமல் தப்பித்தோம். அதேசமயம், இந்திய தேசத்தின் இரண்டாம் தரக்குடிமக்களாக, என்றாவது ஒரு நாள் முதல் தரக் குடிமக்களாகிவிட வேண்டும் என்ற கனவுகளோடு வாழ்கிறோம். இது தள்ளிப்போடப்பட்ட கனவா கத்தான் இருக்கிறது.

**உண்மையான தேசியத்தை அண்ணா சிந்திக்க வைக்கிறார்**

இந்தி ஆதிக்கத்துக்கு முன் அண்ணாவும் அவருடைய தம்பிகளும் அடிபணியாமல் நின்று, பிற தேசிய இனங்களுக்கு மிகப்பெரிய உதாரணங் களாகயிருக்கிறார்கள் அப்படித் தனித்து நின்றதன் மூலம், தேசியம் என்றால், அதாவது உண்மையான தேசியம் என்றால் என்ன என்று அனைவரையும் சிந்திக்க வைத்திருக்கிறார்கள். இப்போது இந்திய ஒன்றியத்துக்கு மிகப்பெரிய பதற்றத்தை தருவது இந்த விஷயம்தான். இந்தி பேசாத மக்களுக்கான இடம் எது என்று வரையறுக்க, இந்தி பேசும் ஆதிக்க வகுப்பு முற்படுகிறது. பெருமுதலாளித்து வத்தின் ஆதரவில் செயல்படும் ஜனநாயக எதிர்ப்புச் சக்திகள் மூலம் தேச ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. தேசியவாதிகள் கூறும் விளக்கம் நம்மை எங்கே இட்டுச்செல்கிறது என்று பார்க்க வேண்டும். கூட்டாட்சி அமைப்பை ஆக்கிர மித்துள்ள டெல்லி ஆதிக்கவாதிகள், எங்களைப் பார்த்து கேட்கிறார்கள், நீங்கள் முதலில் இந்தியரா அல்லது வங்காளியா?"

இப்படி குடியுரிமையையும் தேசிய அடையாளத் தையும் வேண்டும் என்றே மோத விடுகிறார்கள். இப்படி நம்முடைய கடந்த காலத்தைச் சிதைத்து, நிகழ்காலத்தை அடிமைப்படுத்தி, எதிர்காலத்தை நிர்மூலமாக்கும் சக்திகளுக்கு எதிராகப் போராடத் தான் அண்ணா நமக்கு மிகவும் தேவைப்படுகிறார்.

தேசிய இனத்தால் நான் வங்காளி, குடியுரி மையால் நான் இந்தியன், நான் ஏன் இந்தியனாக இருக்கிறேன் என்றால், வங்காளியாக வங்காளத்தில் பிறந்ததால்தானே தவிர, இந்தியாவில் பிறந்ததால் வங்காளியாகிவிடவில்லை. முதலில் இந்தியனாக என்னை அனுமதித்துவிட்டு, அதன் பிறகு வங்காளி யாகவோ தமிழனாகவோ போக விருப்பமா என்று யாரும் என்னைக் கேட்கவில்லை. என்னுடைய தேசிய அடையாளம் என்பது விரும்பித் தேர்வு செய்வதல்ல. அது இயற்கையாக வருவது. எனது தாய் என்னிடத்தில் முதலில் பேசிய வார்த்தைகள் வங்கமொழியானவை. அவளும் நானும் பேசிக் கொண்டது வங்காளியில் என்னுடைய குடியுரிமை



இன்று இந்தியாவுடையது. நாளையே அது கனடா நாட்டினுடையதாக மாறலாம், நானும் பாலிவுட் நட்சத்திரமும் பாஜகவின் ஆதரவாளருமான அக்ஷய்குமாரைப் பின்பற்றினால்! வங்காளியாகப் பிறந்த நான் எந்த நாட்டில் இருந்தாலும் வங்காளி யாத்தான் மடிவேன். தாய்நாடான வங்காளத்தில் மடியவே நான் விரும்புகிறேன்...

நான் எழுதும் வார்த்தைகள் பலருக்கு கோபத் தையும் எரிச்சலையும் ஏற்படுத்தலாம். பலருடைய புருவங்கள் உயரலாம், கடுமையான வசைகளால் என்னை அர்ச்சிக்கலாம். இனி என் குரல் எழும் பாதபடிக்கு என்னை மவுனமாக்கும் வேலையைக் கூடச் சிலர் செய்யலாம். அந்த மவுனத்திலும், மாநிலங்களவையில் அன்றைய மத்திய அரசைப் பார்த்து அண்ணா பேசிய வார்த்தைகள் வாழும், பலப்பிரயோகம் செய்து அமைதியை ஏற்படுத் தாதீர்கள். இதயத்திலிருந்து பேசி, சமரசத்தை ஏற்படுத்துங்கள். அடிப்படை மனித உரிமைகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுங்கள். என்று ஆளுங்கட்சி உறுப்பினர்களை வேண்டிக்கொள்கிறேன். மக் களுக்கு உண்மையை உணர்த்தும் உங்களுடைய உரிமையைப் பயன்படுத்துங்கள். ஆனால் மாற்றுக் கருத்துக்களை யாரும் பேசக்கூடாது. எழுதக் கூடாது என்று தடை விதிக்கும் சட்டங்களை இயற் றாதீர்கள்!

இந்நாட்டில் இந்தி பேசாதவர்கள் யாரும் என் வாயை அடைத்துவிட, முடியாது என்று உறுதி யேற்கும்போது, நீதிக்காகக் குரல்கொடுக்கும்போது, அண்ணா வாழ்கிறார்!

**கர்க சட்டர்ஜி,** ஆய்வறிஞர்
கொல்கத்தா



# நல்ல மனசு!

இருங்கோவேள்

“என்ன குணாளா நேரமாயிடுச்சு, இன்னும் சட்டைக்கு பெட்டி போட்டுட்டுருக்கே! என்கிட்ட விட்டுட்டு நீ போய் குளிச்சிட்டு வா, நா தயார் பண்ணி வைக்கிறேன்!” என்று நண்பனிடம், அவன் செய்த வேலையை வாங்கி, தான் செய்யத் தொடங் கினான் அமுதன்.

அமுதன் உட்பட பன்னிரெண்டு பேர் தத்தமது பட்டப்படிப்பை முடித்துவிட்டு, வேலை தேடி நகரத்திற்கு இடம் பெயர்ந்தார்கள். நகரம் வந்த ஐந்து பேருக்கு வேலை கிடைத்து சென்று விட்டார்கள். அவர்களின் நால்வருக்கு திருமணமும் முடிந்து விட்டது. மற்ற ஆறுபேரில் ஐந்து பேருக்கு அரசு வேலை கிடைத்து வேலை செய்து கொண் டிருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் தனியாகச் செல்லாமல் இருந்த இடத்திலே இருந்து கொண்டு வேலைக்குச் செல்கின்றனர். அமுதன் மட்டுமே தனியார் நிறுவனத்தில் வேலை செய்பவன்.

ஊதியம் குறைவு என்றாலும், எப்போது போனாலும் நிறுவனத்தின் மேலாளர் அமுதன் மீது சினம் கொள்ளமாட்டார். அதற்குக் காரணம் உண்டு. இரண்டு பேர்கள் செய்கின்ற வேலைகளை அமுதன் ஒருவனே செய்து முடிப்பான். ஆகவே, நிறுவனத்தில் மரியாதை இருந்தது. காலையில் தன் நண்பர்கள் சரியான நேரத்திற்கு வேலைக்குச் செல்வ தற்காக அவர்களுக்கு உதவி செய்வான். அவர்கள் அனைவரும் சென்ற பிறகுதான் அமுதன் வேலைக் குப் புறப்படுவான்.

அமுதன் வேலை செய்த நிறுவனத்தில் இருபது பேருக்கும் மேல் வேலை செய்கிறார்கள். மேலாள ரைத் தவிர மற்ற அனைவருக்கும் ஒரே ஊதியம், எல்லோருக்கும் ஒரே வேலைதான். ஆனால், மேலாளருக்கு அடுத்த இடத்தில் அமுதனை வைத்துப் பார்த்தார்கள் அனைவரும். காரணம், அவனது உழைப்பு.

அமுதனின் உழைப்பும், நல்ல பழக்கங்களும், உதவும் குணமும் அனைவருக்கும் பிடித்ததாகிப் போனதால் தங்கியிருக்கும் இடத்திலும் சரி, வேலை செய்யும் இடத்திலும் சரி அவனுக்கு எதிரானவர்கள் யாரும் இருந்ததில்லை. எதிர்க்கருத்துகள் சொல் பவர்கள் கூட இல்லை என்றே சொல்லலாம்.

ஊரிலே அப்பா அம்மா வேளாண்மை செய்து வந்தனர். குறைந்த வருமானம்தான். தங்கை படித்துக் கொண்டிருந்தாள். பட்டப்படிப்பு முடிந்ததும் தங்கைக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற நெருக்கடி அவனுக்குள் உண்டு. ஊதியம் அதிகம் கிடைக்கும் வேலையைத் தேடிக் கொண்டி ருந்தான். அவ்வப்போது அரசு அறிவிக்கும் தேர்வுகளையும் எழுதி வந்தான் என்றாலும் நல்ல

வேலை கிடைத்த பாடில்லை. அதற்காகச் சோர்ந்து போய்விடாமல் கிடைத்த வேலையை மனப்பூர்வ மாகச் செய்து வந்தான்.

தங்கை மலரிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது, அழைப்பு வந்ததும் "மலரு மேல படிக்கப் போறியா? இல்ல அம்மா விருப்பப்படி திருமணம் பண்ணிக்கப் போறியா'' என்றான் அமுதன். என்னண்ணே என்னோட தேர்ச்சி உங்க ளுக்கு தெரிஞ்சிடுச்சா'' என்றாள் மலர். நான் நகரத்தில இருக்கிறேம்மா, உனக்கு முன்னாடியே நான் தெரிஞ்சிக்கிட்டேன். அது இருக்கட்டும், நான் கேட்கிறதுக்கு பதில் சொல்லு" என்றான் அமுதன்.

"எனக்குப் படிக்கத்தாண்ணே ஆசை, ஆனா அம்மாதான் விடாப்பிடியாக நிக்கிறாங்க, நீங்க சொல்லுங்கண்ணே" "சரிடா, நான் ஊருக்கு வரேன் அம்மாக்கிட்ட பேசுறேன்" என்று சொல்லிவிட்டு, நண்பன் கதிரை அழைத்து வர தொடர்வண்டி நிலையம் சென்றான்.

கதிர், அமுதனோடு படித்தவன். நல்ல வேலையில் இருக்கிறான். திருமணம் ஆகி இரண்டாண்டுகள் ஆகியிருந்தன. மனைவி, அவனைவிட அதிக ஊதியம் பெறும் வேலையில் இருந்தாள். அவள் ஒரு இடத்தில் வேலை செய்தாள். இவன் வேறொரு இடத்தில் வேலைசெய்தான். இருவரும் மாதம் ஒருமுறை சந்தித்துக் கொள்ளும் நிலைமைதான் இருந்தது. மனைவியை வேலையை விட்டுவிடச் சொன்னான். அவளோ, நான் உங்களுடன்தான் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். ஆனால், எனக்கு அடுத்து ஒரு தங்கை இருக்கிறாள். எனது திருமணத்திற்கு கடன் வாங்கித்தான் செலவு செய்தார் என் தந்தை. அந்தக் கடன்களை அடைத்து விட்டு, தங்கைக்கு திருமணம் செய்து வைத்துவிட்டு, வேலையை விட்டு விடுறேன் என்றாள் கெஞ்சலாக. கதிர், அவளது நிலைமையைப் புரிந்து கொண்டு, அவளது விருப்பத்திற்கு இணங்கினான். தானாகவே நீ கடனை அடைக்கும் வரை நாம் குழந்தையைப் பற்றி யோசிக்க வேண்டாம் என்று கூறினான். கதிரின் மனைவி கவலையடைந்தாள் என்றாலும். மனதுக்குள் கணவனை நினைத்து மகிழ்ந்து போனாள். கதிருக்கும் அவன் மனைவிக்கும் நடந்த இந்த உரையாடல்கள் எல்லாம் அச்சுப் பிசகாமல் அவ்வப்போது அமுதனிடம் கூறிவிடுவான் கதிர்.

"என்னடா கதிர் கடன் முடிஞ்சுதா" என்றான் அமுதன். இன்னும் ஒரு ஆறுமாதம் பல்லக் கடிச்சிக்கிட்டு இருக்கணுன்டா, அதுக்கப்புறம் நான் வேண்டான்னு சொன்னாலும் அவ அங்க இருக்க மாட்டா, வந்துடுவா" என்றான் கதிர்.

அமுதா, அது விசயமாகத்தான்டா உங்கிட்ட பேசணும்னு வந்தேன். என் மனைவி ஆறு மாதத் துல வேலைய விட்டுப் போயிடுவேன்னு நிருவாகத் துக்கிட்ட சொன்னதும், நிருவாகம், உங்களுக்கு என்ன வசதி வேணுன்னாலும் செய்து தரோம் நீங்க வேலைய விட்டு போக வேண்டாம்னு சொன்னாங் களாம். ஆனா, என் மனைவி நாங்க இரண்டு ஆண்டு காலமா தனித்தனியா இருக்கோம். நான் என் கணவரோட இருக்க ஆசைப்படுறேன். அதனாலே நான் போயே ஆகணும்னு சொல்லி ருக்கா, அதுக்கு அவங்க, அப்போ உங்க இடத்துக்கு ஒரு நல்ல ஆள, நீங்களே சேர்த்துவிட்டுட்டுப் போங்கன்னு சொல்லிருக்காங்க. இத என் மனைவி எங்கிட்ட சொன்னவுடனே, உன்னோட நினைவு தான் எனக்கு வந்துச்சு. அவகிட்ட உன்பேரச் சொன் னதும், சரியான தேர்வுங்க, நீங்க நேராப் போய் அமுது அண்ணனைப் பாத்துப் பேசிட்டு வாங் கன்னு சொன்னா, அதான் வந்துட்டேன். நீ என்னடா சொல்றே" என்றான் கதிர்.

"ஏன்டா, உன்னோட சொந்தக்காரங்க, தங்கச்சி யோட சொந்தக்காரங்க யாரையாவது தேர்ந்தெடுக் காம என்னைய தேர்ந்தெடுத்த" "அமுது, உன்னோட நிலைமை எனக்கு நல்லாத் தெரியும். நீ படிக்கிற காலத்தில இருந்தே நம்ம நண்பர்களுக்காக, எனக்காக என்னென்னவோ செய்திருக்கே, இப்பவும் செய்துக்கிட்டிருக்கே, பணம் கொடுத்தாதான் உதவின்னு இல்ல. நீ, உன்னோ உழைப்பால எத் தனையோ உதவி எல்லாருக்கும் செய்திருக்கே. உன் நல்ல மனசுக்கு, நீ நல்ல இடத்துல நல்ல ஊதியத்துல இருக்கணும்கிறது பல பேரோட ஆசடா. இது நம்ம நண்பர்களுக்குத் தெரிஞ்சா, எல்லாரும் மகிழ்ச்சி யாயிடுவாங்க. உன் ஒப்புதல் கேட்க நான் இங்க வரல. ஆறு மாதம் கழிச்சு அந்த வேலைல நீ சேரணும் தயாரா இருன்னு சொல்லத்தான் வந்தேன்" என்றான் கதிர்.

கண்களில் நீர் திரள, கதிரிடம் உனக்குதான்டா நல்ல மனசு. என்னையத் தேடிவந்து எனக்கு உதவுறியே என்றான். "நான் உனக்கு மட்டுந்தான்டா நல்ல மனசுக்காரன். நீ, நம்ம நண்பர்களுக்கெல்லாம் நல்ல மனசுக்காரன். சரி, சரி அதெல்லாம் இருக் கட்டும் நம்ம தங்கமுத்து அக்கா வீட்டுக்குப் போ, அவங்க சமையல் சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு" என்றான். நண்பர்களுக்கெல்லாம் உடன்பிறந்த சகோதரி போல் சமைத்துப் பரிமாறும் தங்கமுத்து அக்கா வீட்டிற்குச் சென்றனர். அக்கா பழைய சோறு தந்தார் அதே பழைய அன்புடன். இவர்களது அன்பு மாறாதது, எதையும் எதிர்பார்க்காதது.

**இருங்கோவேள்**

மக்களால் தேர்தெடுக்கப்பட்ட 282 உறுப்பினர்கள் இருக்கும்போது செல்வந்தர்கள், கார்ப்ரேட்டுகளுக்கு வழக்குரைஞர்களாக இருந்தவர்கள், தேர்தலையே சந்திக்காதவர்களை, தேர்தலில் இதுவரை வெற்றி பெறாதவர்களை மத்திய அமைச்சர்களாக்கி அழகு பார்த்துள்ளார் மோடி. இன்று பொருளாதாரத்தில் பெரும் பணக்காரர்களுக்கு பெரும் லாபமும், ஏழைகள் மேலும் நலிவடைந்து போகவும் இந்த அமைச்சர்களின் 'கைவண்ணமே' காரணம்! புறவாசல் வழியாக வந்த அமைச்சர்கள் அனைவருமே அதிமுக்கியத்துவம் வாய்ந்த கேபினட் பதவி வகிப்பவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அருண் ஜெட்லி தேர்தலில் தோல்வியுற்று பின்புறமாக நுழைந்தவர். அவர்தான் நிதி அமைச்சர்.

நிர்மலா சீத்தாராமன் தேர்தலில் போட்டியிடாமல் பின்புறமாக நுழைந்தவர். அவர்தான் பாதுகாப்புத் துறை அமைச்சர்!

ஸ்மிருதி இராணி தேர்தலில் போட்டியிட்டு வைப்புத்தொகை இழந்து பிறகு மோடியால் மனித வளத்துறை அமைச்சராக்கப்பட்டார். இவர் தொழிலாளர் நலத்துறை அமைச்சராக குறுகிய காலம் இருந்து பிறகு ஜவுளித்துறை அமைச்சரானார்.

சுரேஷ் பிரபு சிவசேனா கட்சியில் இருந்த இவர் பாஜகவிற்கு தாவியதற்காக இவருக்கும் அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது. இந்திய வரலாற்றில் இவர் ரயில்வே அமைச்சராக இருந்தபோதுதான் அதிக விபத்துகள் நடைபெற்றன. 2017ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடர்ந்து தினசரி ஒரு விபத்து என ஐந்து விபத்துகள் நடந்த நிலையில் எதிர்க்கட்சிகள் பதவி விலக வற்புறுத்தியும் இவர் பதவி விலகவில்லை. பிறகு அமைச்சரவை மாற்றத்தின் போது இவருக்குத் தரையில் ஊரும் ரயிலிலிருந்து வானில் பறக்கும் விமானம் அதாவது சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் பொறுப்பு கொடுக்கப்பட்டது. இவர் பொறுப்பேற்ற பிறகு ஏர் இந்தியாவின் 100 விழுக்காடு பங்குகளும் விற்பனை செய்ய முடிவு எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ரவிசங்கர் பிரசாத் இவரும் எந்த ஒரு தேர்தலையும் சந்தித்ததில்லை. இருப்பினும் இவர்

# மோடியின் அமைச்சரவையே மக்களாட்சிக்கு எதிரானது



## “பாஜக ஆட்சி என்றாலே கார்ப்பரேட்டுகளுக்கான ஆட்சி என்று சுருக்கமாகவே கூறிவிடலாம்.”

*பின்வாசல் வழியாக அமைச்சர் பதவியைப் பெற்று தகவல் தொடர்புத்துறை அமைச்சரானார்.*

*முக்தார் அப்பாஸ் நக்வி இவரும் பீகார் சட்டமன்றம், நாடாளுமன்றம் இரண்டிலுமே போட்டியிட்டு தோல்வியைக் கண்டவர். இவருக்கும் பின்வாசல் வழியாக கேபினட் அமைச்சர் பதவியைத் தூக்கிக் கொடுத்தார் மோடி.*

*மகாராட்டிராவைச் சேர்ந்த பிரகாஷ் ஜவடேகர் இவரும் எந்த ஒரு தேர்தலையும் சந்தித்ததே கிடையாது. இவருக்கு மனிதவளத்துறை அமைச்சர் என்ற ‘பரிசு’ கிடைத்துள்ளது.*

*பெட்ரோலியத்துறையில் கொடிகட்டிப் பறந்த கோயல் குடும்பத்தைச் சேர்ந்த விஜய் கோயல் இதுவரை மேடையேறிப் பேசி வாக்கு வாங்கியது கிடையாது. ஆனால் இவருக்கு பெட்ரோலியத்துறை அமைச்சர் பதவி!*

*பாலியல் குற்றச்சாட்டிற்கு ஆளான பிரபல பத்திரிகையாளர் எம்.ஜே.அக்பர். இவரும் தேர்தலைச் சந்தித்ததே கிடையாது. இவருக்கு வெளியுறவுத்துறை இணை அமைச்சர் பதவி!*

*சிவசேனாவில் இருந்து காங்கிரசிற்குத் தாவி அதன் பிறகு தனிக்கட்சி துவங்கி, பிறகு மீண்டும் காங்கிரசுக்கு வந்து நாடாளுமன்றத் தேர்தலிலும் சட்டமன்றத் தேர்தலிலும் தோல்வி அடைந்து பாஜகவில் சேர்ந்தார் நாராயண ரானே. இவர் சேர்ந்த உடனேயே இவருக்கு கேபினட் அமைச்சர் தகுதி வழங்கப்பட்டு கொள்கை முடிவு எடுக்கும் குழுவில் இவரும் ஒருவரானார்.*

*மக்களால் தேந்தெடுக்கப்பட்ட 282 பாஜக நாடாளுமன்ற உறுப்பினர்களிலிருந்து மோடி கேபினட் அமைச்சர் பதவிக்குத் தேர்தெடுக்காமல் தனக்குத் தேவையான மற்றும் கார்ப்ரேட்டுகளுடன் எப்போதும் உறவாடிக் கொண்டு இருப்பவர்களுக்கு மட்டுமே கேபினட் அமைச்சர் பதவி கொடுத்துள்ளார். பாஜக ஆட்சி என்றாலே கார்ப்பரேட்டுகளுக்கான ஆட்சி என்று சுருக்கமாகவே கூறிவிடலாம்.*

***மவுண்ட் கோபால்***

போரூர் ரோட்டரி சங்கம் (ம) ரம்யம் கல்வி அறக்கட்டளை மற்றும் தொண்டு நிறுவனம் இணைந்து நடத்திய மகளிர் தின விழா, 24, மார்ச், 2019 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை, ராமாபுரம், பாலாஜி மினி ஹாலில் நடைபெற்றது. இந்நிகழ்வு ரோட்டரி சங்கத் தலைவர் திரு. உதயகுமார் தலைமையேற்று நடத்தினார். திருமதி. ரம்யா அசோக் மற்றும் திரு. அசோக் அவர்கள் ரம்யம் கல்வி (ம) தொண்டு அறக்கட்டளையின் சாதனைகளை விளக்கினார்கள். திருமதி. K.V. வள்ளிக் கண்ணு ரோட்டரி மாவட்ட பெண்கள் மேம்பாட்டுத் தலைவர், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார். 100 மாணவர்கள் பரிசுகளைப் பெற்றனர். 250க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

3 சாதனைப் பெண்கள் விருது பெற்றவர்கள்.

திருமதி. Dr. புவனேஸ்வரி முன்னாள் முதல்வர் எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை.

திருமதி. ஹேமலதா தலைமைச் செய்தியாளர் (News J)

திருமதி Dr. ஜெயந்தி ஆகியோர் விருது பெற்றனர். திருமதி. வேதவள்ளி நன்றியுரை ஆற்றினார்கள்.

---

### மதிப்பு மிகு மாகவிஞன்

இவர்கள்
விதவைக்கு
வாழ்வு கொடுத்து
விழிப்படைச் செய்யும்
வித்தகர்கள்.

அப்படியா? எப்படி?

வெள்ளை நிற
காகித விதவைக்கு
கற்பனை என்னும்
நிச்சயம் செய்து,
ஒப்பனை என்னும்
வித்தினைக் கொண்டு,
வார்த்தைகள் என்னும்
வாழ்க்கையைத் தந்து,
அதில் புள்ளி வைத்த
எழுத்தைப் போல் திலகம் இட்டு,
பழகும் நல் கணவன் போல்
கவிச் சுவையினைத் தந்து மகிழ்பவன்தான்
மதிப்பு மிகு மாகவிஞன்.

**காரை – சகா**

# இலங்கையில் நடைபெற்றது போர்குற்றமோ மனித உரிமை மீறலோ இல்லை அது

# திட்டமிடப்பட்ட இனப்படுகொலை

## ஜெனிவாவில் நடைபெற்ற 40-வது ஐ.நா. கூட்ட தொடரில் எம்.எல்.ஏ. கருணாஸ் உரை




கடந்த 2009ஆம் ஆண்டில் உலகமே நினைத்து பார்க்காத வகையில் தமிழீழத்தில் தமிழ் இனப்படு கொலை நடந்தேறியது. இனப்படு கொலையை தடுத்துநிறுத்த வேண்டிய சர்வதேச சமூகம், தங்களது கடமையில் இருந்து தவறியுள்ளதை யாரும் மறுக்க முடியாது.

இனப்படுகொலை நடந்தேறி 10 ஆண்டுகள் கடந்து விட்டன. இலங்கை சிங்கள அரசு நடத்தியது இனப்படு கொலைதான் என்பதற்கு பல வகை களில், அடுக்கடுக்கான ஆதாரங்கள், நேரடி விசாரணைகள் – சாட்சிகள் என அனைத்தும் அடுக்கி வைத்தப்பிறகும் நீதிக்கான விசாரணக்கு காலம் கடத்தும் காரண மென்ன? ஆனால் ஐ.நா-வின் உள்ளக விசாரணை நீர்த்துப் போகச் செய்வதற்கான அனைத்து வேலை களையும் பெரும் வலைப் பின்னல் அமைத்து தொடர்ந்து தடுத்து வருகிறது இலங்கை அரசு.

கடந்த 2015ஆம் ஆண்டு வட அமெரிக்காவின் முன்முயற்சியால் கொண்டுவரப்பட்ட தீர் மானத்தின் படி, சிங்கள அரசு தன்னைத் தானே விசாரித்துக் கொள்ளும் பன்னாட்டு நீதிபதிகள் பங்கேற்புடனான கலப்பு நீதிமன் றத்தை அமைக்க வேண்டுமெனக் கோரியது. 2017ஆம் ஆண்டு வரை அது அமைக்கப்பட வில்லை!எனவே, இரண்டாண்டு கால அவகாசமும் வழங்கப்பட்டது! ஆனால் இப்போது மீண்டும் இரண்டாண்டுகள் இலங் கைக்கு கால அவகாசம் ஏன்வழங்கவேண்டும்.

சர்வதேச சிறப்பு குற்றவியல் தீர்ப்பாயத்தை நிறுவுதலே பெருமளவில் பாதிக்கப்பட்டவர்களான தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்கான வழி முறையாகும் என்பதை நாம் தொடர்ந்து வலியுறுத்துகிறோம்!

1. இலங்கைக்குமீண்டும் கால நீட்டிப்பு வழங்கப் படக் கூடாது.

2. இலங்கை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன் றத்தின் பார்வைக்கு, அல்லது போர்க்குற்றப் புலன் விசாரணைக்கென்று இலங்கைக் காக அமைக்கப்படும் சிறப்புப் பன்னாட்டுக் குற்றத் தீர்ப்பாயத்தின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

3. போரினால் பாதிக்கப்பட்டோரின் துயரம் குறித்தும், ஏனைய சர்வதேசமனித உரிமை, மனித நேயச்சிக்கல்கள் குறித்தும் கண்காணித்துஆறு மாதத்துக்கொரு முறை அறிக்கையளிக்கும் பொறுப்பில் இலங்கைக்கான ஐ.நா. சிறப்பு அறிக் கையாளர் ஒருவர் அமர்த்தப்பட வேண்டும்.

4. இன அழிப்புச் சான்றுகளை அழியவிடாமல் காக்க ஒரு நடுநிலையான பன்னாட்டுப் பொறி முறை அமைக்கப்பட வேண்டும்!

இலங்கையில் நடைபெற்றது வெறும்போர் குற்றமோ மனித உரிமை மீறலோ மட்டு மல்லாது அதுதிட்டமிடப்பட்ட இனப்படுகொலை என்பதை ஐ.நா.பொதுசபை அறிவிக்க வேண்டும். சர்வதேச விசார ணையும் பொதுவாக்கெடுப்புமே தமிழ் மக்களுக்கான ஒரேதீர்வு. நீதிக்கான மனித நேயக் குரலை இந்த ஐ.நா. அறமன்றம் ஓங்கி உயர்த்தி இவ்வுலகுக்கு உரைக்கும் என்று உறுதியாக நம்புகிறோம்! என்று அவர் பேசினார்!



# பெண்களின் மாதவிடாய் கோளாறுகள்


மருத்துவர் **வி.ஹேமாவதி,** M.B.B.S., D.G.O.,
முதன்மை மருத்தவ அலுவலர், அரசு பொது மருத்துவமனை, திருத்தணி.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் : **சேர்மன். ஜலதி உமாசங்கர்**


**முன்னுரை :**

பெண்களுக்கு மாதவிடாய் பற்றிய கேள்வி களும், சந்தேகங்களும் அது குறித்த விழிப்புணர்வு களும் அதிகரித்து வரும் இந்நாளில் அதைக் குறித்த சில விளக்கங்களும் தெளிவுரையும்.

**மாதவிடாய் சுழற்சி :**

மாதவிடாய் சுழற்சி என்பது 28 நாட்களுக்கு ஒருமுறை நடக்கும். ஆனால் எல்லா பெண்களின் உடலும் இந்தச் சுழற்சியில் அமைவதில்லை. சிலருக்கு 28 நாட்களுக்கு முன்பாகவும், சிலருக்கு பின்பாகவும் ஏற்படும். 21 முதல் 35 நாட்களுக்குள் ஏற்பட்டு விட வேண்டும். இந்நாட்களுக்கு முன்னோ, பின்னோ ஏற்பட்டால் அவசியம் மருத்துவரை அணுக வேண்டும்.

**மாதவிடாய் கோளாறுகள் :**

21 நாட்களுக்கு முன்னர் வருவது

35 நாட்களுக்குப் பின்னர் வருவது

தொடர்ந்து வராமல் இருப்பது

அதிக உதிரப்போக்கு ஏற்படவது

மிகக் குறைந்த அளவி ரத்தப்போக்கு இருப்பது

ஒழுங்கற்ற சுழற்சிகள் ஏற்படுவது

**1. ஒழுங்கற்ற மாதவிடாய் காரணங்கள் :**

பூப்பெய்தது முதல் 19 வயது வரை ஒழுங்கற்ற மாதவிடாய் இருப்பது சாதாரண விசயம். இவர்களுக்கு 30 முதல் 35 நாட்களுக்கு ஒருமுறை சுழற்சி நடக்கும் 20 வயதிற்கு மேல் மாதவிடாய் சீரான இடைவெளியில் ஏற்படும்.

**2. தைராய்டு பிரச்சினைகள் :**

தைராய்டு சுரப்பி சரியான அளவில் சுரக்காமல் இருக்கும் பட்சத்தில் மாதவிடாய் சுழற்சி பாதிக்கப் படும். இதில் இரண்டு வகை உள்ளது.

Hypothyroid எனப்படும் பிரச்சனையில் Thyroid Hormone சுரப்பி கம்மியாக சுரப்பதினால் மாத

விடாய் நாட்கள் ஒழுங்கில்லாமலும், அளவு குறைந்தும் ஏற்படும். இதனால் உடல் பருமனாதல், உடல் சோர்வு, தூக்கமின்மை, கரு உருவாவதில் சிக்கல், Hypercholesterolemia பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளத. Hypertyroidism என்னும் பிரச்சனையில் தைராய்டு ஹார்மோ அதிகமாகச் சுரப்பதினால் ஒழுங்கற்ற மாதவிடாய்கள், அதிக இரத்தப் போக்கு ஏற்படும்.

**3. Polycystic Ovarian Hydromel:**

இது கருமுட்டையில் ஏற்படும் பிரச்சனை ஆகும். ஹார்மோன் சரியான அளவில் இல்லாத போது PCOS என்ற பிரச்சனை ஏற்படுகிறது. மாறி வரும் இந்த நவீன உலகத்தில் (Junk Foods) சாப்பிடும் பழக்கம் அதிகரித்துள்ளதாலும் உடற்பயிற்சிகள் (Lack of Physical Activity) செய்வது குறைந்துள்ளதாலும் உடல் பருமன் அதிகரிக்கிறது. இதனால் Insulin Resistance உண்டாவதால் ஹார்மோன்கள் சரியான விகிதத்தில் சுரக்காமல் போகின்றன. இதனால் கருமுட்டையில் நீர்க்கட்டிகள் உருவாகிறது மற்றும் ஒழுங்கற்ற மாதவிடாய் மற்றும் இரத்தப்போக்கு அளவில் மாற்றங்கள் ஏற்படுகிறது.

**4. இரத்த சோகை :**

Anemia எனப்படும் இரத்த சோகை இன்று பெரும்பாலான இளம் பெண்களிடம் காணப்படுகிறது. காரணம் ஒழுங்கற்ற சாப்பாடு முறைகள் மற்றும் சரிவிகித உணவு உட்கொள்ளாமல் இருப்பது. இரத்தத்தில் Hemoglobin அளவு 9ற்கும் கீழே குறையும்போது மாதவிடாய் கோளாறுகள் ஏற்படுகிறது.

**5.ஹார்மோன் Imbalance:**

மாதவிடாய்க்கு Estrogen, Progesterone என்ற Hormone தேவை. இவற்றின் சுரப்பில் ஏதேனும் பாதிப்பு ஏற்படும் போது மாதவிடாய் சுழற்சியில் பாதிப்பு உண்டாகிறது.

**6. மெனோபாய் முன் :**

மெனோபாஸ் எனப்படும் மாதவிடாய் நிற்கும் நிலைக்கு முன் Pre Menopausal ல் உள்ள சில பெண்களக்கு சில மாதங்களுக்கு முன் ஒழுங்கற்ற மாதவிடாய், அதிக உதிரப்போக்கு, குறைவான இடைவெளியில் மாதவிடாய் ஏற்பாடும்.

**சரி செய்யும் வழிகள் :**

பூப்பெய்தவுடன் வரும் கோளாறுகள் தானாக 21 வயதிற்கு மேல் சரியாகிவிடும்.

அதிக உதிரப்போக்கு இருந்தால் மருத்துவரை அணுகுதல் அவசியம்.

மாதவிடாய் கோளாறு ஏற்படின் தைராய்டு அளவை பரிசோதனை செய்து குறைவாக உள்ளதா, அதிக அளவில் உள்ளதா என்பதற்கேற்ப வைத்தியம் செய்து கொள்ள வேண்டும்.

## அதிக மன அழுத்தம் காரணமாகவும், மாத விடாய் கோளாறுகள் ஏற்பட வாய்புள்ளது. மன அழுத்தத்தையும் கூடுமான வரையில் தவிர்த்தல் வேண்டும்.

PCOS உள்ளவர் முதலில் உடல் எடையை குறைத்தல் வேண்டும். அவசியய்ம உணவு முறைகளையும் மாற்ற வேண்டும். Junk Foods தவிர்த்து உடற்பயிற்சியை மேற்கொண்டால் நல்ல பலன் கிடைக்கும். கருமுட்டையில் நீர்க்கட்டியின் தன்மைக்கு ஏற்றவாறு மருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டும்.

இயற்கையாக ஒவ்வொரு மாதவிடாய் சுழற்சியின் போதும் 5080 மிலி இரத்தப்போக்கு ஏற்படும். இதை ஈடு செய்யும் விதமாக இரும்புச்சத்து உள்ள பொருட்களை உட்கொள்ள வேண்டும். இரத்த சோகை உள்ள பெண்கள் அதன் அடிப்படை காரணம் அறிந்து சிகிச்சை பெற வேண்டும்.

அதிக மன அழுத்தம் காரணமாகவும், மாத விடாய் கோளாறுகள் ஏற்பட வாய்புள்ளது. மன அழுத்தத்தையும் கூடுமான வரையில் தவிர்த்தல் வேண்டும்.

**மாதவிடாய் காலங்களில் செய்யக் கூடாதவை மற்றும் செய்ய வேண்டியவை :**

1. மாதவிடாய் சுழற்சியின் போது லேசான அடிவயிற்று வலி ஏற்படும் வாய்ப்புள்ளது. அதற்கு மாத்திரை உட்கொள்ளத் தேவையில்லை.

2. நாப்கின்களை 6 மணி நேரத்திற்கு ஒருமுறை மாற்ற வேண்டும்.

3. அதிக அளவில் தண்ணீர் மற்றும் பழங்கள் உட்கொள்ள வேண்டும்.

4. தேநீர் மற்றும் அதிக இனிப்பு வகைகளை தவிர்த்துக் கொள்ளலாம்.

5. தினசரி பேரீச்சம்பழம் மற்றும் இரும்புச் சத்துள்ள பொருட்களை எடுத்துக் கொள்வது சிறந்தது.

6. சுத்தமாக இருத்தல் வேண்டும்.

7. துணிகளை பயன்படுத்துவதை விடுத்து சுத்தமானSanitary Napkin உபயோகப்படுத்துதல் வேண்டும்.



மாதவிடாய் காலத்தில் பெண்கள் அனுப விக்கும் வேதனையைக் குறைக்கும் நோக்கத்தில் வலி நிவாரணி ஒன்றை கண்டுபிடித்திருக்கிறார்கள் டெல்லி ஐ.ஐ.டி. மாணவர்கள். அந்த மாணவர்கள் பெயர் ஆர்ஷித், ஹேரி ஷெராவத். இருவரும் டெக்ஸ்டைல் டெக்னாலஜி துறையில் இரண்டாம் ஆண்டு படிக்கிறார்கள். ஏழு மாத ஆய்வுக்குப் பிறகு இந்த வலி நிவாரணியை உருவாக்கி இருக்கிறார்கள். 10 மில்லி லிட்டர் அளவு கெண்ட இதனை மூன்று மாதவிடாய் சுழற்சி காலங் களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். தயாரிக்கப் பட்ட தேதியில் இருந்து மூன்று ஆண்டுகள் வரையும் உபயோகித்துக் கொள்ளலாம் என்கி றார்கள்.

வலி ஏற்படும் இடத்தில் ஒரு முறை தடவினால் போதும். உடனடியாக வலி குறையும். எட்டு மணி நேரம் வரை மீண்டும் வலி தோன்றாது என்கிறார்கள். யூகலிப்டஸ் ஆயில், புதினா, விண்டர் கிரீன் ஆயில் உள்ளிட்டவற்றைக் கொண்டு இந்த நிவாரணி உருவாக்கப்பட்டுள்ளது. அதனால் பக்க விளை வுகள் எதுவும் ஏற்படாது என்றும் உறுதியாக கூறுகிறார்கள்.

இதுபற்றி டெல்லியைச் சேர்ந்த கருத்தரிப்பு மைய தலைமை நிருவாகி டாக்டர் ரீத்தா பாஸ்கி கூறுகையில், "வலி நிவாரணி பயன்படுத்துவதால் பக்க விளைவுகள் ஏற்படும் என்று நிறையப் பெண்கள் பயப்படுகிறார்கள். இதனை பயன்படுத் தினால் பெண்கள் வலியின்றி வாழ்வார்கள். நான் மருத்துவர் என்பதால் இதை உறுதியாகக் கூறு கிறேன். இதனால் எத்தகைய பக்க விளைவுகளும் ஏற்படாது" என்கிறார்.

அகில இந்திய மருத்துவ அறிவியல் மையமும் இந்த நிவாரணி சிறப்பானதாக இருப்பதாகக் கூறியுள்ளது. இந்த நிவாரணியைத் தயாரித்ததற்கான காரணம் பற்றி ஆர்ஷித், ஹேரி ஆகியோர் கூறுகையில்...

"எங்களுடன் படிக்கும் தோழிகள் மாதவிடாய் சமயங் களில் ஒழுங்காக தேர்வு எழுத முடியாமல் சிரமப்படுகிறார்கள். வலி, வேதனை நீண்ட நேரம் நீடிப்பதால் அவர்களால் படிப்பில் கவனம் செலுத்த முடிவதில்லை. அதனால், அவர்களால் நன்றாக தேர்வு எழுத முடிவதில்லை. அவர்கள் மட்டுமின்றி 40 விழுக்காடு பெண்கள் மாதவிடாய் சமயத்தில் தங்களுடைய அன்றாட வேலைகளை சிரமத்துடன் செய்யும் நிலையில் இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்த வலி நிவாரணியைத் தயாரித்திருக் கிறோம்" என்கிறார்கள்.

# சிந்தனைச் சிறகுகள்

சிந்தனைத் துளிகள் சிதறி விழுந்திட
வந்து விழுந்தன கவிதை வரிகள்
நிந்தனை இல்லா நிலையில் எழுதி
நிம்மதி கொள்வாய் மனத்தில் தெளிவாய்
சொந்தச் சிந்தனைச் சொல்லும் திறனை
எந்த நிலையிலும் மாற்றா தெழுதி
வந்தனை செய்து வாழ்வோர் இடையில்
விந்தை மனிதனாய் வாழ்ந்து காட்டு

எழுதும் வரிகள் ஈட்டி முனையாய்
எழுதிடும் கருத்துகள் உறுத்தும் முள்ளாய்
பழுதுகள் இல்லா இதயம் தன்னில்
பாய்ந்து வரட்டும் உரமாய் எழுத்தும்
விழுதுகள் தாங்கும் ஆல மரம்போல்
விரிந்ததாய்க் கருத்துகள் விளங்கச் செய்வாய்
உழுத நிலத்தில் விளையும் பயிர்க்கு
உரம்போல் இட்டு வளர்த்திடு மனத்தை

நல்ல சிந்தனை மனத்தில் விதைத்திடு
நாடு நலம்பெறத் துணிந்து எழுதிடு
இல்லம் சிறந்திட எழுதிக் குவித்திடு
இதயச் சிரிப்பால் நோய்க ளற்றிடு
பொல்லார் செயல்களைப் பொசுக்கிடச் செய்திடு
புரிந்தவர் தம்மை அணைத்து மகிழ்ந்திடு
எல்லாம் நல்ல நெறியில் இயம்பிடு
எழுதும் எழுத்தால் இப்புவி திருத்திடு!

கவிஞர். இராமன்






# சிறுமி சித்ரவதை இந்து பாரத் சேனா?

கோவையில் சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கி படுகொலை செய்த கும்பல் மொத்தமாக கைது செய்யப்பட்ட மிகக் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும். மே பதினேழு இயக்கம்.

பொள்ளாச்சி வன்கொடுமையைப் பற்றி சமூகம் பேசிக் கொண்டிருக்கும் போதே கொஞ்சமும் மனசாட்சி இல்லாத மிருகங்கள் 6 வயதுச் சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்து கொன்று, வீட்டின் அருகே உள்ள பகுதியில் சிறுமியை வீசி விட்டுச் சென்றிருக்கின்றன.

தொடர்ந்து பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் நிகழும் இந்த கொடுமைகள் தமிழ்ச் சமூகத்தை ஒரு உளவியல் சிக்கலுக்குள் தள்ளிக் கொண்டிருக்கின்றது. பல எதிர்கால பெண் சாதனை யாளர்கள் வீட்டுக்குள் முடங்கிப் போகும் சூழலை மக்களின் இந்த உளவியல் அச்சம் ஏற்படுத்தும் அபாயமாக இருக்கிறது.


கோவையில் அந்தச் சிறுமி கொல்லப்பட்டப் பகுதியில் கஞ்சா விற்பனை பெருமளவில் நடை பெற்றுக் கொண்டிருப்பதாக மே பதினேழு இயக்கத் தோழர்களிடம் அப்பகுதி பொதுமக்கள் தெரிவிக் கிறார்கள். இதன் பின்னணியில் பணபலம் படைத்த அதிகாரக் கும்பல் இருக்கிறது.

கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு நபர்கள் “இந்து பாரத் சேனா“ எனும் இந்துத்துவ அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிய வருகிறது. இதன் பின்னணியில் உள்ள மொத்தக் கும்பலும் கண்டறியப்பட வேண்டும். இந்துத்துவ அமைப்பு இச்செயலின் பின்னே உள்ளதால் மத்திய அரசின் அதிகார பலத்தைப் பயன்படுத்தி குற்ற வாளிகள் தப்பித்துக் கொள்ளும் வாய்ப்பு இருக் கிறது. அதனை காவல்துறை அனுமதிக்கக் கூடாது என மே பதினேழு இயக்கம் கேட்டுக் கொள்கிறது.

இந்து பாரத் சேனா போன்ற சமூக விரோத அமைப்புகளை தடை செய்ய வேண்டும் என்று தமிழக அரசை மே பதினேழு இயக்கம் வலியுறுத்து கிறது.

ரவிச்சந்திரன் தன்னுடன் அமர்ந்து பேசியது போல் நயமாகவும், வஞ்சகமா கவும் பேசியுள்ளார். ஒரு சில இடங்களில் என் தம்பிமார்கள் இப்படி எல்லாம் கஷ்டப்பட்டார்கள் என கூறி தன் பேச்சுக்கு மெருகு ஏற்றுகின்றார். ராசிவ் கொலையில் விசாரணையில் உள்ள சந்தேகக் கேள்விகளை பெரிதாக எடுத்துக் கூறி, தான் அதற்காக போராடு பவர் போல தன்னை சித்தரித்துக் காட்டு கின்றார். இதனால் மக்களுடைய சிந்தனையில் வேகத்தைக் கூட்டி, தான் ஒரு தமிழ் படைப்பாளி, போராளி போல் தன்னை காட்டுகின்றார். ஆனால் உண்மையான முக்கியமான விசயங்களை (அந்த 7 பேரும் சிறையில் இருந்து வெளி வருவதற்கான முக்கிய செய்திகளை) எடுத்துக் கூறாமல் விட்டு விடுவதே இவர் வேலை.. எவ்வளவு நரித்தனம்.

ரவிச்சந்திரன் எழுதிய சிவராசனின் டாப் சீக்ரெட் என்ற புத்தகத்தில் விசாரணை அதிகாரி தியாகராஜன் தன்னை (ரவிச்சந்திரனை) இலங்கைக் காரர் என்றும், விடுதலைப் புலிகள் என்றும் குறிப்பிட்டுள்ளார். ரவிச்சந்திர னுடைய தகப்பனார் தமிழக அரசின் பள்ளியில் வேலை செய்யும் ஒரு ஆசிரியர். சமீபத்தில் ரவிச்சந்திரன் பரோலில் வெளி வந்து தனது தகப்பனார் சொத்துக்களை பாகம் பிரித்து பெற்றுக் கொண்டார். இவ்வாறு இருக்கும் பட்சத்தில் எப்படி அவர் இலங்கைக்காரர் (வெளி நாட்டவர்) என்று அவர் மீது குற்றப் பத்திரிக்கையை தவறு தலாய் பிரசுரித்தனர். இதை உச்சநீதிமன்றம் எவ்வாறு கவனிக்காமல் விட்டது? உச்சநீதிமன்றம் தெளிவாக ஏமாற்றப்பட்டுள்ளது. தியாகராசன் என்ற இந்த அதிகாரி பேரறிவாளனுக்கு பேட்டரி என்ன உபயோகத்திற்கு என்று அறியாமலே வாங்கிக் கொடுத்தேன் என்று சொன்னதை அறிந்தே வாங்கிக் கொடுத்தேன் என்று தவறுதலாய்ப் பதிவு செய்து விட்டேன் என்று அபிடவிட் கொடுத்து உள்ளார் (இங்கு தான் சதிச்செயல் ஆரம்பம். இவர்கள் வெளிவராதபடிக்கு நடைபெறுகின்றது) விசாரணை அதிகாரி தியாகராசன் குற்றப் பத்திரிக்கை தெரிந்தே தவறுதலாக தயார் செய்து விட்டு பேரறிவாளனிடம் தான் தவறு செய்ததாக அபிடவிட் அடித்துக் கொடுத்துள்ளார். ரவிச் சந்திரனிடம் அவ்வாறு அபிடவிட் அடித்துக் கொடுக்காததன் நோக்கம் என்ன? இதை கைக்கூலி




# மனுவாத கைக்கூலிகள்

தமிழ் இனக் காவலரான கலைஞர் கைக்கூலி யார் என்று அன்றே தெரிந்து கொண்டார். அதனால் அத்துரோகியை அவர் அன்றே சிறையில் அடைத்தார். துரோகியின் பேச்சை வலைதளங்களில் கேட்டேன். அதில் ரவிச்சந்திரன் (ராசிவ்காந்தி கொலையில் ஆயுள் தண்டனை பெற்றவர்) எழுதிய சிவராசனின் டாப் சீக்ரெட் என்ற புத்தகத்தை கைக்கூலியும் அடிபிறாமல் வாசித்து மனப்பாடம் செய்து விட்டு அதை அப்படியே மேடையில்

மக்களிடம் பேசி விழிப்புணர்வு ஏற்படுத்தி இருந்தால் இன்று நீதிமன்றம் அவர்களை தானாய் விடுதலை செய்து இருக்கும். தவறு செய்த அதிகாரி தானாய் நீதிமன்ற தண்டனைக்கு உட்பட்டு இருப்பார். உண்மைக் குற்றவாளி, ராசபக்சே அல்லது வேறு யாரை அழைத்து வந்தாலும் இவர்களின் விடுதலை தடுத்து நிறுத்த முடியாததாக இருந்து இருக்கும். ஆனால் கைக்கூலி இந்த முக்கியச் செய்தியை மட்டும் விட்டுவிட்டு மற்ற எல்லாவற்றையும் திறம்பட பேசி இருக்கிறார். இதில் எவ்வளவு கொடுமையும், வஞ்சனையும் நிறைந்து இருக்கின்றது. இன்னும் சில நாட்களில் இந்த விடுதலை நடைபெறும். இதில் என்ன விந்தை என்றால் 7பேர் விடுதலைக்காய் உண்மையாய் போராடிய இளைஞர்களிடம் முன்பு நட்பாக, இயல்பாக பேசி வந்த கைக்கூலி நீதிமன்றத்தில் மரண தண்டனைகளிலிருந்து விடுதலை வாங்கிக் கொடுத்தபின் அந்த இளைஞர்களுடன் பேசுவதை யும், நட்பு பாராட்டுவதையும் நிறுத்திக் கொண்டார். இதைத்தான் அவருடன் இரந்தவர் தெளிவாகச் சொன்னார். அவர் பணம் வாங்கிக் கொண்டு செயல்படுகிறார் என்று. ஏழையின் சொல் அம்பலம் ஏறாது என்பது தமிழில் உள்ள பழமொழி.

மேலும் தேசியக் கட்சிகளைக் காட்டிலும் மாநிலக் கட்சியில் தமிழ் உணர்வாளர்களும், தமிழ்ப் பற்றுள்ளவர்களும் அதிகம். அவர்கள் தமிழ் பற்றுள்ளவர்களுடன் சேருவர். ஆரியர்கள் சமற்கிருதத்தை வளர்ப்பதிலும், தன் இனத்தை வளர்ப்பதிலும் கவனமாய் இருப்பர். இவர்களால் தமிழர்களை தோற்கடிக்க முடியவில்லை. இதனால் வஞ்சகமாய் பின் வாசல் வழியாக வந்து, சூழ்ச்சியின் பயனால் தமிழனை தோற்கடிக்க வேண்டும் என்று சிந்தித்து, ஒரு அடிமை கைக்கூலியைத் தேர்ந் தெடுத்து தமிழ் ஆர்வலர் போல பேசச் செய்து மக்களை (தமிழர்களை) பிரிப்பதில் கவனம் செலுத்துகின்றனர். பெரியார், திராவிடம் என்ற சொல்லில் பல இழைகளை (பல இன மக்களை) இணைத்து வலிமையான கயிற்றைச் செய்து வைத்திருந்தார். ஆனால் இந்த கைக்கூலி போன் றோர் கயிறு வலிமை இழப்பதற்கான செயலில் இறங்கி உள்ளனர்.

பெரியாரோ (ஒரே வகையான ஜீன்கள் அமைப்பு கொண்ட மக்கள்) அனைவரையும் ஒன்றாக இணைத்து திராவிடம் என்ற ஓர் சொல்லை உருவாக்கி தமிழ் இனத்திற்கு பாதுகாப்பும் வலிமையும் தேடிக் கொடுத்தார். பெரியார் ஒரு ஞானி, பேரறிஞர். ஆனால் சிந்திக்கும் திறன் அற்ற மூடனாகிய கைக்கூலி, நீ தெலுங்கன், நீ கன்னடன், நீ மலையாளி என்று வேறுபடுத்தி பெரியார் உருவாக்கிய பலமான கயிற்றை பலவீனமான கயிறாக மாற்ற முற்படுகிறார்.

ஒரு தீவிரவாதி ஒரு கூட்டத்தைத் தாக்க முற்படும்போது முதலில் அந்தக் கூட்டத்தின் உள்செல்லும் போது வேறு யாரும் தன்னை அடையாளம் கண்டு கொள்ளக்கூடாது என்பதற் காக அக்கூட்டத்தை சார்ந்தவன் போல் வேடம் பூண்டு அங்கு செல்லுவான். அவனது வெளிச்செயல் வெளிப்படும் போதுதான் அவன் யார் என்று உலகுக்கு அடையாளம் தெரியும். உதாரணம் சொல்ல வேண்டும் என்றால் பாகிசுதான் தீவிரவாதி இந்திய கடல் எல்லை வழியாக இந்தியாவின் உள் ஊடுருவும் போது தங்களை பிறர் அடையாளம் கண்டு விடக்கூடாது என்பதற்காக தன் நெற்றியில் குங்குமத்தால் இந்து பக்தர் போல் நாமம் இட்டு வந்தனர் என்பது அனைவருக்கும் தெரியும்.

மேலும் சிறுத்தையானது காட்டு எருதுகளை வேட்டையாடும்போது கூட்டமாக இருக்கும் எருமைக் கூட்டத்தில் உள்ள எருதுகளை வேட்டை யாடுவது இல்லை. மாறாக அவற்றை நாலா பக்கமும் சிதறடித்து அவற்றில் கடைசியாக தனிமையில் இருக்கும் எருதை வேட்டையாடி உணவாக உட்கொள்ளும். அதுபோல கூட்டமாக அமைதி யாக வாழும் தமிழ் மக்களை வேட்டையாடுவ தற்காக தனிமைப்படுத்துவற்காக மதவாதம் என்னும் கிழட்டுப் புலி பயன்படுத்திய நபர்தான் கைக்கூலி. இவர் பேச்சுகளையும் செயல்பாடுகளையும் நாம் உன்னிப்பாக கவனித்தால் மிகத் தெளிவாகத் தெரியும். இந்த கிழட்டுப்புலி எப்படி எல்லாம் தமிழகத்தில் தமிழர்களை வஞ்சித்து சிதறடிக்கின் றது என்ற உண்மையை உணர்ந்த அண்ணன் வைகோ, அண்ணன் திருமாவளவன், சகோதரர் திருமுருகன் காந்தி, பாரிவேந்தர், அண்ணன் வேல்முருகன், ஐயா நல்லக்கண்ணு போன்றோர் தங்களுக்குள் பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஒருவரை ஒருவர் எதிர்த்தாலும் அவற்றை எல்லாம் மறந்து ஓர் அணியில் இணைந்து உள்ளனர். மதவாதக் கும்பலிடம் கைக்கூலி வாங்கிக் கொண்டு செயல்படும் துரோகி இலங்கையில் போர் நடைபெறும் போது மனுவாதம் தன் தூதுவரை இந்தியாவின் சார்பில் அனுப்பியதைப் பற்றி என்றாவது, எங்காவது பேசியதுண்டா. ஏழுபேரை யும் விடுவிக்கலாம் என்ற உடன் மனுவாத முக்கியப் பங்காளர் ராசபக்சேயை அழைத்து வந்த நிகழ்வை எங்காவது எதிர்த்துப் பேசி போராடியது உண்டா, ராசீவ்காந்தி கொலை விசாரணையில் மனுவாத இயக்கத்தில் பங்குள்ள அதிகாரிகள், தமிழர்கள் மீதும், திராவிட இயக்கத்தவர்கள் மீதும் தவறு தலான குற்றச்சாட்டை சுமத்தி அவர்கள் சித்ர வதைக்கு உட்படுத்திய நிகழ்வை என்றாவது விமர்சித்தது உண்டா. மனுவாதக் கூட்டத்துக்கு தன்னை விசுவாசியாக காட்டிக் கொள்ளும் கைக்கூலி, தமிழர்களை அழிக்கும் ஒரு மனிதர்

என்று தெரியவரும் நாள் வெகு தொலைவில் இல்லை.

கைக்கூலியின் உச்சபட்ச மோசடி பேச்சு எதுவென்றால் தமிழ்த் தேசிய தலைவர் பிரபாகரன் இறந்து விட்டார் என்ற சொல் பல தமிழர்களால் தாங்க இயலாதது. அந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு எங்கள் அண்ணன் பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்று பொய் சொல்லிக் கொண்டு திரியும் செயல். இது மனுவாதம் சொல்லிக் கொடுத்த நச்சு வார்த்தை. அவர் இறந்து விட்டார் என்ற செய்தியைத் தெரியப்படுத்தினால் தமிழ் ஈழத்து ஆர்வலர் ஒன்று கூடி அடுத்த கட்டத் தலைவரை ஏற்படுத்தி தமிழ் தலைவர் போராடிய வழியில் போராட ஒருவரை ஏறப்டுத்தி ஒரு பெரிய வெற்றியைப் பெற்று விடுவர் என்ற நிலைப் பாட்டால் மனுவாதம் இவ்வாறு தூற்றிக் ொகண்டு அலைய ஒரு கைக்கூலியை ஏற்பாடு செய்துள்ளது. மேலும் அண்ணன் பிரபாகரன் சொன்ன சொல் மாறாதவர் ஆவார். நாணயம் தவறாதவர், சொன்ன வார்தையில், கருத்தில் இருந்து பின்வாங்க மாட்டார் . அவர் கூறியது ஒரு வேளை நான் எதிரி கையில் பிடிபட்டால் என் உடலில் இருந்து உயிர் பிரிந்து விடும். அதற்காகத் தான் இந்த கொடிய விசம் சயனைடு குப்பி என் கழுத்தில் எப்போதும் தொங்கிக் கொண்டு இருக்கின்றது. என் உயிர் அற்ற உடலை எதிரி தொட்டு விடக்கூடாது. என் ஒருபிடி சாம்பல் கூட எதிரியிடம் கிடைத்து விடக்கூடாது என்று தன் மெய்க் காப்பாளர் களுக்கு கட்டளை இட்டிருந்தார் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், கைக்கூலியோ அண்ணன் பிரபாகரன் கோழையைப்போல் ஓடி ஒழித்துக் கொண்டார் என்று அவரைக் கேவலப் படுத்தவது போல பிரச்சாரம் செய்து கொண்டு இருக்கிறார். இச்செயல் கண்டனத்துக்கு உரியது. இந்த கைக்கூலியை தமிழர்கள் தெளிவாக அடையாளம் கண்டு துரத்தும் நாள் மிக சமீபத்தில் உள்ளது.

மேலும் தமிழகத்திற்கு வெளியே இந்தியாவின் பிரிவினைவாதியுடனும் இந்தியாவின் மக்களைப் பிரிக்கும் பிரிவினைவாதக் கட்சியுடனும் இணைந்து பிரச்சாரம் செய்து வருகிறார். இவர் தமிழகத்தில் மாத்திரம் இவர்களை எதிர்த்து பிரச்சாரம் செய்து வருகிறார்.

இவ்வாறு தமிழுக்கும் தமிழனுக்கும் துரோகம் செய்பவர்களை கலைஞர் விட்டு வைப்பதில்லை. இந்தத் தமிழ் இனத் துரோகியை அன்றே அடையாளம் கண்டு கொண்டார். அதனால் தான் அவரை அன்று சிறையில் அடைத்தார் கலைஞர். அதனால் கலைஞர் அவர்களை நான் இன்றும் பாராட்டுகிறேன்.

• **இராஜாசிங்**



## பிரண்டை

பிரண்டை என்ற ஒரு
friend - டை நாம்
போனோம் மறந்து,
ஆனால்
friend என்ற ஒரு
பிரண்டை பல நோய்
போக்கும் சிறந்த நல் மருந்து.

இது எத்தனையோ வியாதிகளை
இல்லாமல் போக வைக்கும்
எடுத்து நான் சொல்கிறேன்
எல்லாம் உங்கள் நன்மைக்கே

அவை
முழங்கால் வலி நீக்கும்
உடல் சோர்வுதனை மாற்றும்
சிறு குடல் பிரச்சனைகள்
சீராய் சரியாக்கும்

இதை தேனிலோ, நெய்யிலோ
கலந்து தினம் சாப்பிட்டால்
கழிவுகள் வெளியேறி
உடல் பருமன் உடன் குறையும்

மாதவிடாய் காலங்களில்
வயிற்றுவலி, இடுப்புவலி
இவை யாவும் குணமாகும் இப்
பிரண்டைத் துவையல் உண்டால்

கண்ட கண்ட மாத்திரைகள்
கிட்டினியைக் கெடுத்து விடும்
பிரண்டை
கால்சியம் குறைபாட்டை
கட்டாயம் சரி செய்யும்




# வாக்காளப் பெருமக்களே...

## மாற்றத்தை உருவாக்க வாக்களிப்பீர்!

மது குடிப்பதில் தமிழகம் முதலிடம், மதுவினால் அதிகமான விபத்துகளில் முதலிடம் வகிப்பது தமிழகம். மதுவினால் கணவரை இழந்த விதை வைகள் அதிகமாக வாழுமிடம் தமிழகம். மேலும், நீட் தேர்வு எழுதியிருந்த நிலையில் தந்தையின் குடிப்பழக்கத்தால் மனமுடைந்த நெல்லை மாணவர் தினேஷ் நல்லசிவன் மதுக்கடைகளை மூட வேண்டும் என பிரதமருக்கும், முதல்வருக்கும் (2.5.2018) கடிதம் மூலம் வலியுறுத்தி மேம்பாலத்தில் தூக்குக்கயிற்றில் உயிரைவிட்ட பிறகாவது மதுக் கடையை மூட மனம் வந்ததா? மதுவினால் ஏற்படு கிற பாதிப்புகள் போதாது என்று, ஒரே இரவில் 500/ 1000/ ரூபாய்களை பணமதிப்புழப்பு செய்து பிறப்பு முதல் இறப்புவரை பால் ஊற்றக்கூட வழியில்லாமல் மக்களை நடுரோட்டில் தவிக்க விட்ட மதவாத மோடியுடன் கூட்டுச் சேர்ந்து தங்கள் பதவியை தக்கவைத்துக் கொள்ளவும், ஊழல் செய்து மேலும் கொள்ளையடிக்கவும் நம் மக்களையோ மண்ணையோ பற்றி கவலைப் படாமல் விளை நிலங்களை அடாவடியாக பறித்து, இயற்கை வளங் களை அழித்து, கார்ப்பரேட்டுகளின் வளர்ச்சிக்காக மீத்தேன், ஹைட்ரோ கார்பன், எட்டுவழிச்சாலை, பத்துவழிச்சாலை, சாகர்மாலா, பாரத்மாலா மற்றும் உயர்மின் கோபுரம் என விவசாயிகளை கண்ணீர் விட்டுக் கதற வைத்ததை மறந்துவிட முடியுமா?

நீர், நிலம், காற்று மாசுபடுவதால் பல்வேறு நோய் களுக்குக் காரணமான ஸ்டெர்லைட் ஆலை வேண்டாம் என குரல் கொடுத்த தூத்துக்குடி மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதை மறந்துவிட முடியுமா? ஏழை, கிராமப்புற மாணவர்களின் மருத்துவக் கனவை சிதைக்கும் நோக்கத்தோடு 'நீட்' தேர்வை அறிமுகப் படுத்தி மருத்துவராக வரவேண்டிய அனிதாவின் உயிரை பலி வாங்கியதை மறந்து விட முடியுமா? ஒவ்வொரு நாடாக சுற்றிவந்த மோடி, ஒக்கி புயல், கஜா புயலின் இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களை பார்க்க வரவில்லை. பேரிடர் நிவாரணம் வழங்க பணம் இல்லை. ஆனால், விஜய்மல்லையா, நீரவ் மோடிகளுக்கு பல ஆயிரக்காணக்கான கோடிகள் கடன் கொடுத்து தப்பிக்க வைத்தது எப்படி? போதாக் குறைக்கு சில கட்சிகளைச் சோர்ந்த பிள்ளைகளால் கொடூரமான முறையில் பொள்ளாச்சியில் நடந்த பாலியல் வன்முறைகளின் அவலம். ஜி.எஸ்.டி.வரி, சுங்க வரி என சிறு வியாபாரி களை முடக்குதல், எந்தத் துறையானாலும் இலஞ்சம், ஊழல் என நேர்மையற்ற ஆட்சி நிர்வாகம் இன்னும் எவ்வளவோ பல அழிவுகளை யும், இன்னல்களையும் நம் நாடும், நம் மக்களும் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆகவே, இந்த அவல நிலைக்குக் காரணமான நம் எதிரி, மதவாத அரசான மோடி அரசுதான். இந்த அவலத்துக்கு துணை நின்று பதவி சுகத்திற்கும் பணத்தாசைக்கும் அடிமை அரசாக செயல்படுகிற எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர்செல்வம் போன் றோர்க்கு சரியான பாடம் புகட்டும் விதமாகவும், மேலும் தேர்தல் கூட்டணி என்று கொள்கையற்று மாறி மாறி கூட்டணி கூடும் எதிர்க்கட்சிகளுக்கும், நம் வாக்குகளை விற்றுவிடாமல் 18-4-2019 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றம் மற்றும் தமிழக சட்டமன்ற இடைத்தேர்தலில் மக்கள் நலன் சார்ந்து செயல்பட்டு மண்ணுரிமைக்காக போராடும் உணர்வுள்ள உண்மையான சமூகப் போராளி களுக்கு வாக்களிப்பீர்.

தமிழக மக்களே மாற்றத்தை உருவாக்க சிந்தித்து வாக்களிப்பீர்!

*மதுவில்லா தமிழகம் காண்போம்!*

*மதுவில்லா சமுதாயம் உருவாக்குவோம்!*

**காந்தியவாதி சசிபெருமாள் ஆதரவு**

மது ஒழிப்பு போராளிகள். 72997 29357.







# அ.தி.மு.க. கூட்டணி!

எம்.ஜி.ஆர். உருவாக்கிய கட்சியை எப்படி யெல்லாம் செயலலிதா கட்டிக் காத்தார்? எந்தெந்த கட்சிகளுடன் எப்படி எல்லாம் கூட்டணி வைத்தார்? அதற்காக அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் என்னென்ன என அனைத்தையும் விளக்குகிறது இந்தக் கட்டுரை.

1972ஆம் ஆண்டு திமுகவுடன் ஏற்பட்ட மோத லால் கட்சியை விட்டு நீக்கப்பட்டார் எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பிறக்கிறது. தனித்து விடப்பட்ட நிலையிலும் அஞ்சாமல் மக்களைத் தஞ்சமடைகிறார் எம்.ஜி.ஆர். எம்.ஜி.ஆர் ரசிகர் மன்றங்களை ஒருங்கிணைக்கிறார் ஆர். எம். வீரப்பன். எம்.ஜி.ஆரின் தீவிர ஆதரவாளர்கள் ஒருங்கிணைகிறார்கள். புதுமுகமாக 1973ஆம் ஆண்டு திண்டுக்கல் இடைத்தேர்தலை சந்திக்கிறது அதிமுக. திமுகவை வீழ்த்தி முதல் வெற்றிக் கனியை பறித்து தமிழக அரசியல் அரங்கை அதிர வைக்கி றார் எம்.ஜி.ஆர். அடுத்து 1974ஆம் ஆண்டு கோவை இடைத்தேர்தலிலும் அதிமுக வெல்கிறது.

வெற்றிக்கு வழி அரசியல் அரங்கில் சாதுரியமே என்பதை நன்றாகப் புரிந்து கொண்ட எம்.ஜி.ஆர். காங்கிரசுடன் கரம் கோர்க்கிறார். மிசா சட்டத்தின் போது இந்திரா காந்திக்கு ஆதரவாக இருக்கிறார். இந்த உறவு வலுப்பட்டு கடைசி வரை அசைக்க முடியாத நட்பாக மாறுகிறது.

1976ஆம் ஆண்டு திமுக ஆட்சியை காங்கிரசு அரசு டிஸ்மிஸ் செய்கிறது. 1977ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தல் வருகிறது. அதிமுக அமோக வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்கிறது. அதன் பிறகு 1987ஆம் ஆண்டு வரை எம்.ஜி.ஆரின் ஆட்சியே தமிழகத்தில் தொடர்கிறது. 3 சட்டசபைத் தேர்தல்களில் எம்.ஜி.ஆர் வெற்றி பெற்று அசைக்க முடியாத சக்தியாகத் திகழ்ந்தார்.

இந்த காலகட்டத்தில்தான் காங்கிரசுக்கும் அதிமுகவுக்கும் இடையே ஆழமான நட்பும் கூட்ட ணியும் இருந்தது. லோக்சபா உனக்கு, சட்டசபை எனக்கு என்ற புதிய பார்முலாவை உருவாக்கி அரசியலை அதிர வைத்தார் எம் ஜி ஆர். இதுதான் எம்.ஜி.ஆர். பார்முலா என்று பிரபலமானது. இடை யில் ஜனதாக் கட்சியுடன் கைகோர்த்தார் எம்.ஜி.ஆர். இது எம்.ஜி.ஆரின் அடுத்த கூட்டணி. தனது அமைச்சரவையில் அதிமுகவுக்கு 2 இடங்களைக் கொடுத்தார் பிரதமராக இருந்த சரண்சிங். இந்த ஆட்சி நீண்ட காலம் நீடிக்க வில்லை. இரண்டு ஆண்டுகளில் கவிழ்ந்தது.

1980ஆம் ஆண்டு அதிமுக காங்கிரசுக் கூட்டணி கலகலத்தது. திமுகவுடன் கை கோர்த்தது காங்கிரசு. நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரசு திமுக கூட்டணி 37 இடங்களில் வென்றது. அதிமுகவுக்கு 2 இடங்களே கிடைத்தன. மீண்டும் ஆட்சியைப் பிடித்த இந்திரா காந்தி, எம்ஜிஆர் ஆட்சியை டிஸ்மிஸ் செய்தார்.



சட்டசபைக்கு நடந்த தேர்தலில் அதிமுக அமோக வெற்றி பெற்றது. திமுக காங்கிர சுக் கூட்டணி அதிர்ந்து போனது. 234 இடங்களில் 129 இடங்களை கைப்பற்றி காங்கிரசுக்கும் திமுகவுக்கு சாக் கொடுத்தது அதிமுக.

எம்ஜிஆர் என்ற சக்தியை மீறி எதுவும் செய்ய முடியாது என்பதை உணர்ந்த காங்கிரசு மீண்டும் அவரிடமே வந்தது. இந்தக் கூட்டணி பின்னர், எம்ஜிஆரின் இறுதிக்காலம் வரை நீடித்தது. எம்ஜி ஆரைப் பொறுத்தவரை சட்டசபைக்கு மாநிலக் கட்சிகள் நாடாளுமன்றத்திற்கு தேசியக் கட்சிகள் என்ற நிலைப்பாட்டில் கடைசி வரை தெளிவாக இருந்தார். இதனால்தான் சட்டசபைத் தேர்தலில் காங்கிரசுக்கு குறைந்த இடங்களைக் கொடுப்பார். அதே சமயம் நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிர சுக்கு அள்ளிக் கொடுப்பார். ஒன்றுமே செய்யாமல் லட்டு லட்டாக காங்கிரசு தமிழகத்தில் எம்பிக் களைப் பெற்று வெற்றி பெற்ற காலம் அது. இன்று போல காங்கிரசை கெஞ்ச விடாமல் எம்ஜிஆரே அள்ளிக் கொடுத்தார்.

இந்திய விடுதலைக்குப் பின் தமிழகம் நல்ல நிலையை எய்தி இருந்தது. ஒரு பக்கம் வளர்ச்சியும் முன்னேற்றமும் என போட்டி இட்டது. தமிழகத் தைச் சார்ந்த கர்மவீரர் காமராசர், பசும்பொன் முத்துராம லிங்கம், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத், அறிஞர் அண்ணா, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், சிலம்புச் செல்வர் ம. பொ. சி. சி. பா. ஆதித்தனார், தோழர் பாலதண்டாயுதம். பி. இராமமூர்த்தி என பலரும் தமிழ்நாட்டின் புகழை, உச்சிக்குக் கொண்டு சென்றிருந்தனர். அவர் களின் பெயருக்கென ஒரு தனியிடம் இருந்தது. அவர்களில் யாரும் கட்சியை பொருள் குவிக்கப் பயன்படுத்த வில்லை. அவர்கள் மக்களாட்சி முறைக்கு தோள் கொடுத்தனர். தங்களுக்கு அடுத்து, தன் பிள்ளைகள் என்றோ, தன்னைத் தவிர தன்னை எதிர்த்து நின்றவர்கள் அழிந்து போக வேண்டும் என்றோ செயலாற்றிய தில்லை. சாதிகளைப் பேசி தமிழர்களைப் பிரித்து, இலவசங்களைக் காட்டியே மக்களை கூறு போட்டு அரசியல் இலாப நட்டக் கணக்குப் பார்க்கவில்லை. பணக்காரர்களாக பலர் இருக்க, இல்லாதவர்களுக்கு எப்படி உதவுவது என திட்டம் தீட்டினர். இரண்டொரு குறைகள் இல்லாமல் இல்லை. அவற்றில் ஒன்று இந்தியை இராசாசி அவர்கள் தமிழ்நாட்டில் ஒரு பாட மொழியாக கொண்டு வந்தது. இரண்டாவது காமராசர் அவர்கள் “மேடாவது குளமாவது... அது எங்கே இருந்தால் என்ன? அது இந்தியாவிற்குள்ளே தானே இருக்குது“ என தமிழர் பகுதிகளை அண்டை மாநிலங்கள் பறித்துக் கொண்டு போக துணை நின்றது. காரணம் அப்பொழுது தென்னாட்டில் தமிழர்களின் தலைமை மேலோங்கி இருந்தது. நம்மை மீறி அண்டை மாநிலங்கள் என்ன செய்துவிட முடியும்? என்ற எண்ணம். இது வெல்லாம் எப்படி காலம் நெடுக நமக்கு கைகொடுக் கும் என்ற தொலைநோக்குப் பார்வை இல்லாமல் எடுத்த முடிவுகளாயின. இதனூடே திராவிட குறுக்கு சால்களை ஒட்டியவர்களின் ஆட்சி அரசி யல். ஒருவழியாக முன்னேறிக் கொண்டிருந்த தமிழகத்தை சாதி ஒழிப்பு உத்தமர்களால் தமிழ்நாடு ஒற்றுமை இல்லாத மாநிலமாக ஆகி, திராவிடப் பயிர் நடவு மும்முரமாகி, களை எது? பயிர் எது? எனத் தெரியாதவர்களால் தமிழ்நாடே களைகளால் பயிர் மூழ்கிப் போனது.

பேருந்துகளை எல்லாம் அரசுடைமை ஆக்குகி றோம் என்று முதலாளிகளை ஒழித்தவர்களே

*முதலாளிகளானார்கள். மக்களுக்கான கல்வியை அரசும் வசதி படைத்தவர்களும் தங்களுக்கு பெருமை வர வேண்டும் என்பதற்காகவே மக்களுக்கு நடத்தி கல்வியை பிறர் பலரிடம் தந்து வணிகப் பொருளாக்கி ஏழைகள் இயலாதவர்களின் துன்பத்தில் மகிழ்ந்தார்கள்.*


*மன்னரை ஒழித்தவர்கள் அவர்களின் உதவித் தொகையையும் ஒழித்தோம் என்றவர்கள் தாங்களே மன்னர்களாகி தன் உறவுகளுக்கு முடிசூட்டி மகிழ்ந்தர்கள். இப்பொழுதெல்லாம் மக்களாட்சி மக்களை ஏமாற்றவும், வாக்குகளை காசுக்கு விற்கவும், கூப்பிட்ட போதெல்லாம் கூட்டமாக வரவும் பழக்கப்படுத்தி விட்டனர்.*

*அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த வுடன் மும்மொழித் திட்டத்தில் இந்தி இருக்கின் றதே என்று சொன்னவர், இருமொழித் திட்டம் என சொல்லி முதல் மொழி தாய்மொழி (தமிழ்மொழி என உறுதிப்படுத்தாமல்) எனவும் இரண்டாம் மொழி ஆங்கிலம் எனவும் சட்டம் இயற்றியதால் தமிழ் நாட்டில் உள்ளவர்களின் தாய்மொழிகளில் ஒன்றாக தமிழை வரிசையில் நிற்க வைத்து, ஆங்கிலம் மட்டும் அசைக்க முடியாத இடத்தில் நிற்க வைத்தார்.*

*அவருக்குப் பின்னால் வந்தவர்களால் தமிழ்நாடு பல சிக்கல்களில் இருந்து மீளாத நாடாக இருக்கிறது. போதை மயக்கத்தைத் தந்து சிந்தனை அற்றவர்களாக ஆக்கினர். ஏற்கெனவே காற்றுக்கும் மழைக்கும் தாங்காதவர்களான நம் தமிழ்க்குடிகள் புயலுக்கும் துயருக்கும் அழ... ஒன்றுமே தெரியாதது போல பேசியவர்களே மீண்டும் மீண்டும் பேசுகி றார்கள். தேறுமா தமிழ்நாடு? இப்பொழுது, கர்நாடகம் மீண்டும் ஒரு அணையைக் கட்ட ஆணை பெற்றுள்ளது. இதுவரை கட்டிய அணைகள் போதாது என்று! தமிழ்நாட்டின் சார்பில் பதினெட்டு மாநிலங்களவை உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் முப்பத் தொன்பது உறுப்பினர்களும் இருக்கின்றார்களே... அவர்கள் எல்லாம் என்ன வேலை செய்கிறார்கள்? நமக்கு மாநில அமைச்சரவை இருக்கின்றதே அது என்ன செய்கிறது? ஏற்கெனவே நமக்கு செய்த இடையூறு களைத்தான் திராவிட சட்சிகள் பொதுச் சண்டை யாக்குவது வழக்கம். அதே மேடை, அதே நாடகம், அதே ஒத்திகை தொடங்கிவிட்டது. தங்களுக் குள்ளான திறமை இன்மையை பேச்சுப் போட்டி, பட்டி மன்றமாக்கி தோல்வியைத் தரப்போகின்றன.*

*சிந்தித்துச் செயல்பட வேண்டும். இல்லையேல் இதுவரை விற்காத ஏதாவது ஒன்று இருக்கும் என நாம் நினைத்தால் அதையும் விற்றுவிட்டு, தங்களின் அரசியல் பேச்சுகளை அரசியல்வாதிகள் தொடரு வார்கள் என்பதை உணர்ந்து தமிழர்களாகிய நாம் ஒன்றுபட்டுச் செயல்படுவது நல்லதாகும்.*

**- MOUNT.SJ.GOPAAL**



**"படையாச்சி தான் ஆனா இந்த முறை என்னோட ஓட்டு திருமாக்குத்தான்".**

## சிதம்பரம் தொகுதி

இன்றைக்கு மோடி கும்பலால் குறிவைக்கப்பட்டுள்ள தொகுதி. 100 கோடி ரூபாய் இறக்கப்பட்டுள்ளது. எப்ப டியாவது, திருமாவளவனை தோற்கடித்தே ஆக வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ்.முடிவு செய்துள்ளதாம். ஏனென்றால், இந்தியாவிலேயே சனாதனத்துக்கு எதிராக மாநாடு நடத்தி பா.ஜ.க.வின் அடித்தளத்தை அசைத்தவர் தலைவர் தொல். திருமாவளவன் மட்டுமே.

அதனால்தான் எழுச்சித்தமிழரை தோற்கடிக்க துடித்துக்கொண்டிருக்கிறது பா.ஜ.க.கும்பல், இந்த கும்பலுக்கு பா.ம.க. அதிமுக உள்ளிட்ட அடிவருடிகள் கூட்டம் ஆதரவாக களமிறங்கியுள்ளது.

இந்தியாவின் ஆன்மாவான சனநாயகத்தையும் மதச்சார்பின்மையும் காப்பாற்ற வேண்டிய தேவை அவசியமாகிறது.

ஆகவே,

சிதம்பரம் தொகுதியில் சிறுத்தைகள் களப்பணியை இன்னும் தீவிரப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. அந்த வகையில் கிராமங்களுக்குச் சென்று மந்தை பரப்புரையில் ஈடுபட்டு வருகிறோம்.

வன்னியர் நிறைந்த சேந்தாரக்கிள்ளையில் ஒரு பெரியவர் சொன்னார், தம்பி நான் படையாச்சி தான். ஆனா இந்த முறை நான் திருமாவளவனுக்குத்தான் ஓட்டு போடுவேன். ஏன்னா மோடி இன்னொரு முறை வரக்கூடாது".

இது தான் தொகுதி முழுக்க ஒலிக்கும் குரல். நூறு கோடி என்ன எத்தனை கோடி கொட்டினாலும் தலைவரின் வெற்றியை யாரும் தடுக்க முடியாது என்பதை இந்தக்குரல் உறுதிப்படுத்துகிறது.

– வன்னிஅரசு



# “விண்வெளியை ஆயுதமயமாக்க நாங்கள் விரும்பவில்லை” வி.கே. சரஸ்வத் பேட்டி!

இந்திய தலைமை அமைச்சர்? மோடி, திடீரென்று நான் பேசப் போகிறேன். நாட்டுக்காகப் பேசப் போகிறேன் என்றார். பேசிய பிறகு பார்த்தால் 2012ஆம் ஆண்டுக்கு முன்பே இந்தியா செய்த சாதனையை, தான் செய்ததாக மற்றவருக்குத் சொந்தமானதை தம்முடையதாக்கிக் கொண்டாடிக் கொள்கிறார். அவரின் பொய் முகத்தை தோலுரிக் கவே இக்கட்டுரை

2012ஆம் ஆண்டு ஏப்ரல் 27ம் தேதி இந்தியா டுடே இதழில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம் பாட்டு அமைப்பின் தலைவர் வி.கே. சரஸ்வத்தை, அந்த இதழில் ராணுவம், பாதுகாப்பு தொடர்பான விவகாரங்களைக் கவனித்துவரும் சந்தீப் உன்னிதன் பேட்டி கண்டிருந்தார். அந்தப் பேட்டியிலிருந்து:

கேள்வி: **செயற்கைக் கோள்களை விண் வெளியிலேயே அழிக்கும் சக்தி டிஆர்டி ஓவுக்கு உள்ளதா?**

வி.கே.எஸ்: இப்போது இந்தியாவில் சாட்டி லைட் எதிர்ப்பு அமைப்பிற்கான எல்லா பாகங்களும் இந்தியாவிடம் தயாராக உள்ளன.

விண்வெளியை ஆயுதமயமாக்க நாங்கள் விரும்பவில்லை. ஆனால், எல்லாம் தயாராக இருக்க வேண்டுமென விரும்புகிறோம். இவையெல்லாம் தேவைப்படும் நேரம் வரலாம். இப்போது ஒரு சாட்டிலைட் எதிர்ப்பு அமைப்பிற்கான எல்லாம் தயாராக இருக்கிறது. சிறிய மாறுதல்களைச் செய்ய வேண்டும்.

ஆனால், அதனை எலக்ட்ரானிக்கலாக செய்துவிடலாம். ஒரு சாட்டிலைட் நொறுக்கி சோதனை செய்து பார்க்க மாட்டோம். ஏனென் றால், விண்வெளியில் துகள்கள் உருவாகி, பிற சாட்டி லைட்களைச் சேதப்படுத்தும்.

கே. **இந்த சாட்டிலைட் எதிர்ப்புத் திறனை எப்படி உருவாக்கினீர்கள்?**

வி.கே.எஸ். சாட்டிலைட்களைக் குறுக்கிட சில அடிப்படையான அம்சங்கள் தேவை. விண்வெளி யில் சுற்றும் சாட்டிலைட்டின் பாதையைக் கணிக்கும் திறன் தேவை. பிறகு, அவற்றை நோக்கி ஏவுகணைகளை அனுப்பி, அவற்றை அழிக்க வேண்டும்.

நம்மிடம் Long Range tracking Radar (LRTR) இருக்கிறது. அதனை 600 கி.மீ. தாண்டிச் சென்று தாக்கும் கண்டம் தாண்டும் ஏவுகணைகளில் பயன்படுத்து கிறோம். அதன் திறனை 1400 கி.மீ ஆக உயர்த்தி னால், சாட்டிலைட்களை கணிக்க முடியும்.

சாட்டிலைட்களைத் தாக்குவதைவிட, கண்டம் தாண்டும் ஏவுகணைகளைத் தாக்குவதுதான் கடினம். சாட்டிலைட்டுகள், அவற்றுக்கென வகுக்கப்பட்ட பாதையில்தான் செல்கின்றன. தவிர, கண்டம் தாண்டும் ஏவுகணை விவகாரத்தில் ஒரு சதுர மீட்டரில் 0.1 அளவுள்ள ஏவுகணையை, கண்டு பிடித்து மறிக்கிறோம். சாட்டிலைட் அதைப்போல பத்து மடங்கு பெரிது. ஒரு மீட்டர் அளவுக்கு இருக்கும்.

கண்டம் தாண்டும் ஏவுகணைக்காகத் தயாரிக் கப்பட்ட தொலைத் தொடர்பு அமைப்பும் நம்மிடம் இருக்கிறது. அக்னி 5க்காக தயாரிக்கப்பட்ட முதல் ஸ்டேஜ் பூஸ்டர் ஏவுகணையை 600 கி.மீ. ஏவும் திறனுடையது. கண்டம் தாண்டும் ஏவுகணையை மோதி அழிக்கும் வாகனமும் நம்மிடம் உள்ளது.

சாட்டிலைட்டைத் தாக்கும் திறன் இந்தியாவுக்கு உள்ளதாக சரஸ்வத் 2012ல் சொல்கிறார். ஏன் அதனைச் சோதித்துப் பார்க்கவில்லையென்றும் சொல்கிறார்.



# விண்வெளி விஞ்ஞானி விக்ரம் சாராபாய் மகள் மீது பொய் வழக்கு போட்ட மோடி

ஜவஹர்லால் நேரு, தன்னுடைய நெருங்கிய உதவியாளரும் விண்வெளித்துறை விஞ்ஞானியான விக்ரம் சாராபாய் அவர்களின் உதவியுடன் இந்தியாவின் விண்வெளித்துறைக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்தியாவின் முதல் செயற்கை கோளான ஆர்யபட்டாவை வடிவமைத்து வெற்றிகரமாக ஏவியவர் விக்ரம் சாராபாய். 2002ல் குஜராத்தில் மோடி அரசு ஆயிரக்கணக்கான முஸ்லிம்களை படுகொலை செய்த போது,

பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கான சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தவர் புகழ் பெற்ற நாட்டிய கலைஞரும் விக்ரம் சாராபாய் அவர்களின் மகளுமான மல்லிகா சாராபாய். வழக்கம் போல மல்லிகா சாராபாய் மீதும் பொய் வழக்கு போட்டு அவரை கொடுமைப் படுத்தியவர்தான் இந்த மோடி.

இப்போது, நேரு சாராபாய் ஸ்தாபித்த இஸ்ரோவின் சாதனையை, 2010ம் வாக்கில் கைகூடிய தொழில் நுட்பத்தை, தன்னுடைய சாதனையாக பெருமையடிக்கிறார் மோடி.



பெருங்களத்தூர் கையேடு வெளியீட்டு விழாவும், வான்பூமி இணையதள தொலைக்காட்சி தொடக்க விழாவும் கடந்த 31–3–2019 அன்று சென்னை, பழைய பெருங்களத்தூர், முடிச்சூர் சாலையில் அமைந்துள்ள மேக்மெல் உணவகக் கூடத்தில் நடைபெற்றது. வந்திருந்தவர்களை வான்பூமி ஆசிரியரும், செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் காஞ்சிபுரம் மாவட்டத் தலைவருமான திரு. ஏ.பிரகாஷ் அவர்கள் வரவேற்றார். செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. எஸ். ரங்கநாதன் அவர்கள் முன்னிலை வகித்தார். வின்னர் அரிமா சங்கத்தின் தலைவர் திரு. ஜே. முரளிதரன் அவர்கள், தொழிலதிபரும் தமிழ் மாநில காங்கிரசின் முக்கிய ஆளுமையுமான திரு. உமாபதி, முற்றம் இதழின் செய்தியாளர் திரு. மணிமாறன் உள்ளிட்டோர் வாழ்த்திப் பேசினர்.

கவிஞர். பௌத்தபிரியன், திரு. வெங்கடகிருஷ்ணன், பேராசிரியர் கோபி, திரு. இராபர்ட் ஆகியோருக்கு சிங்கம் விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. திரு. ஏ.உமாபதி, திரு. எஸ்.மெல்வின்ராஜா, திரு. சுப.சுப்புராமன் ஆகியோர் சிறப்பிக்கப்பட்டனர்.

பெருங்களத்தூர் கையேட்டினை, செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர். திரு. விசவனூர் வே. தளபதி அவர்கள் வெளியிட்டு வாழ்த்திப் பேசினார். சட்ட ஆலோசகர் திரு. திருமூர்த்தி அவர்கள் வான்பூமி இணையதள தொலைக்காட்சியைத் தொடங்கி வைத்து வாழ்த்திப் பேசினார். வான்பூமி இதழின் விளம்பரப்பிரிவு மேலாளர் திரு. ராம்குமார் நன்றி தெரிவித்தார். பீப்பிள் டுடே ஆசிரியர் திரு. வி. சத்தியநாராயணன் அவர்கள் நிகழ்வை சிறப்புற தொகுத்தளித்தார். திரு. கே. லக்சுமிபதி, திரு. கே. தினேஷ் ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாட்டிற்கு பேருதவி புரிந்தனர்.

**- கே. பவானி**



# விடுதலைப்புலிகளை இதற்காகத்தான் 30 நாடுகள் சேர்ந்து வீழ்த்தினார்கள்!

உலகில் வாழும் எந்தவொரு விடுதலை அமைப்பும் தனக்கென தனியாக இராணுவச் சீருடைகளை அணிந்ததில்லை!

உலகில் வாழும் எந்தவொரு விடுதலை அமைப்பினரும் தங்களது படை நடவடிக்கைகளும் பெயர் சூட்டி அழைத்ததில்லை!

உலகில் வாழும் எந்தவொரு விடுதலை அமைப்பினரும் போரில் இறந்த தங்கள் வீரர்களுக்கு தனியாக இடம் ஒதுக்கி கல்லறைகள் (துயிலும் இல்லங்கள்) கட்டியதில்லை! உலகில் எந்தவொரு விடுதலை அமைப்பும் நாற்பதாயிரத் திற்கு மேற்பட்ட வீரர்களை இழந்ததில்லை!

உலகில் எந்தவொரு விடுதலை அமைப்பினரை யும் உலக அரங்கில் பேச்சுவார்த்தைகளுக்கு சர்வதேச நாடுகள் அழைத்ததில்லை!

உலகில் எந்தவொரு விடுதலை அமைப்பினருக் கும் ஏராளமான சமூக, போராட்ட, செய்தி இணைய தளங்கள் இருந்ததில்லை!

முகநூல்களிலும் வேறு சமூக, செய்தி இணைய தளங்களிலும் தலைவர் பிரபாகரன் பற்றியும், விடுதலைப் புலிகள் போராட்டம் பற்றியும் முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வந்தது போல், வேறு எந்த விடுதலை அமைப்பினர் பற்றியும் பரவலாக செய்திகள் வந்ததில்லை!

விடுதலைப் புலிகளுக்கு உலகினில் வாழும் அனைத்து தமிழர்களிடமும் இருந்து கிடைக்கப் பெற்ற பெரும் செல்வாக்கு போல், உலகினில் வாழும் வேறு எந்த விடுதலை அமைப்புக்கும் கிடைத்த தில்லை!

விடுதலைப்புலிகள் தீவிரவாத இயக்கம் என்றால் எப்படி முப்படைகளையும் கொண்ட மரபுவழி இராணுவமாக வளர முடிந்தது? அது எப்படி சாத்தியமானது? அவர்கள் தீவிரவாதிகள் என்றால், எப்படி மக்களின் பெரும்பலம் அவர்களுக்குக் கிடைத்தது?

பிறகு ஏன் விடுதலைப் புலிகளை முப்பத்திற்கும் மேற்பட்ட நாடுகள் சேர்த்து அழிக்க வந்தன?

அந்த சிறிய தேசத்தில் இருந்து அவர்கள் வளர்ந்த அசுர வளர்ச்சிதான் காரணம்! அவர்களின் வளர்ச்சியை ஜீரணித்துக் கொள்ள முடியாத இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் அவர்களையும், அவர்களின் போராட்டத்தையும் அழித்து விட முடிவு செய்து, போர் தொடுத்து மக்களை துடிக்கத் துடிக்க கொன்று குவித்து, போராளிகளை கொன்றும், சில போராளிகளைக் கைது செய்தும் சகல இடங்களையும் கைப்பற்றினார்கள். ஆனால், அவர்களுக்குக் கிடைத்ததோ விடுதலைப்புலிகளின் சில ஆயுதங்கள் மட்டுமே! அவ்வாறெனில் சில நூற்றுக்கணக்கான தளபதிகளும், பல ஆயிரக் கணக்கான போராளிகளும் எங்கே போனார்கள்? அவர்கள் தான் அங்கிருந்த தமிழ் பேசும் மக்கள் என்பதை இன்று வரையும் விடுதலைப் புலிகளை "தீவிரவாதிகள்" என்று சொல்லும் பலர் ஏற்றுக்கொள்வதில்லை!

இன்று வரையும் சில சர்வதேச நாடுகளாலும், சில விசக்கிருமிகளாலும் "தீவிரவாதி" என்றழைக் கப்படும் தலைவர் பிரபாகரன் அவர்கள் ஒரு தனி மனிதனாக ஒரு விடுதலைப்படையை உருவாக்கி, மக்களுக்கான பல நன்மைகளும், பயன் பெறக் கூடியதுமான பல உள்கட்டமைப்புக்களை உருவாக்கினார்.

அந்த உள்கட்டமைப்புக்கள் பின்வருமாறு :

தமிழீழ காவல்துறை, குற்றத்தடுப்புக் காவல் துறை, குற்றப் புலனாய்வுப் பிரிவு.

தமிழீழ வைப்பகம்

தமிழீழ புனர்வாழ்வுக் கழகம்

தமிழர் புனர்வாழ்வு அபிவிருத்திக் கழகம்

சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி

கிராமிய அபிவிருத்தி வங்கி

அனைத்துலகச் செயலகம்

நந்தவனம் (வெளிநாடுகளில் இருந்து தாயகம் திரும்புவோர்க்கான தொடர்பாடல் சேவை மையம்)

சுங்க வரித்துறை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

அரசறிவியற் கல்லூரி

வன வனத்துறை

தமிழீழ நிதித்துறை

தமிழீழ நிதித்துறை, நீதிமன்றுகள்

கலை பண்பாட்டுக்கழகம்

மருத்துவப் பிரிவு

திலீபன் சிறப்பு மருத்துவமனை

பொன்னம்பலம் நினைவு மருத்துவமனை

மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு

சுகாதாரப் பிரிவு

ஆவணப்படுத்தல், பதிப்புத்துறை, வெளியீட்டுப் பிரிவு

போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு

நிர்வாகச் சேவை

அனைத்துலக தொலைத்தொடர்பு செயலகம்

மீன்பிடி வளத்துறை

விழிப்புக்குழு (கிராமங்களுக்கான இரவுப் பாதுகாப்பு)

தொழில்நுட்பக் கல்லூரி

சூழல் நல்லாட்சி ஆணையம்

தமிழீழ பொறியியல் தொழில்நுட்ப வளர்ச்சித்துறை

தமிழீழ விளையாட்டுத்துறை

தமிழீழ காலநிலை அறிவுறுத்தல் வாரியம்

தமிழீழ போக்குவரவுக் கழகம்

மனிதவள செயலகம் (தமிழீழ கிராம சேவகர் பிரிவு)

வழங்கல் பகுதி

மக்கள் தொடர்பகம் (மக்கள் குறை நிறைகளை தலைவரிடம் கொண்டு செல்லும் பிரிவு)

விலங்கியல் பண்ணைகள்

விவசாயத் திணைக்களம்

தமிழ்மொழி காப்பகம்

தமிழீழ சட்டக்கல்லூரி

தமிழீழ கல்விக்கழகம்

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை

காந்தரூபன் அறிவுச்சோலை (ஆதரவற்ற ஆண் குழந்தைகளுக்கானது)

செஞ்சோலை (ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கானது)

வெற்றிமனை (வலுவிழந்தோருக்கானது)

அன்பு முதியோர் பேணலகம்

இனிய வாழ்வு இல்லம் (காது கேளாத, வாய் பேசாத, பார்வை இல்லாத மாற்றுதிறன் பெற்ற சிறார்களுக்கானது.

## எளிய மருத்துவம்

கோடை காலத்தில் புற ஊதாக்கதிர் வீச்சுகளின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்பதால் பெண்களின் உதடுகள் பொலிவிழந்து நிறம் மாறத் தொடங்கும். ஒரு சில சமையல் பொருட்களைப் பயன்படுத்தியே உதடுகளை இயல்பான நிறத்திற்கு கொண்டு வந்து விடலாம். உதடுகளில் உள்ள இறந்த செல்களை அப்புறப்படுத்தவதற்கு வெள்ளை சர்க்கரையை பயன்படுத்தலாம். வெள்ளைச் சர்க்கரையுடன் வெண்ணெய் சேர்த்து நன்றாக குழைத்து, வாரம் மூன்று முறை உதட்டில் தடவி வந்தால் உதடுகள் பொலிவு பெறும்.

உதட்டில் படர்ந்திருக்கும் கருமையைப் போக்குவதில் தேனுக்கும் முக்கியப் பங்களிப்பு இருக்கிறது. இரவில் தூங்கச் செல்வதற்கு முன் தினமும் உதட்டில் தேன் தடவி வரலாம். சில வாரங்களிலேயே நல்ல பலன் கிடைக்கும். உதடும் மிருதுவாகி விடும். எலுமிச்சைச் சாறை இரவில் சிறிது நேரம் உதட்டில் தடவி மசாஜ் செய்துவிட்டு நீரில் கழுவி விட வேண்டும். பீட்ரூட்டை சாறு எடுத்தும் உதட்டில் தடவி வரலாம். அடிக்கடி அதனைத் தடவி வந்தால் கருமை நிறம் மறையத் தொடங்கிவிடும். ஐஸ் கட்டிகளையும் பயன்படுத்தலாம்.

உதடு வறட்சி, உதடு வெடிப்பு போன்ற பிரச்சினைகளுக்கு ஐஸ் கட்டிகள் நிவாரணம் தரும். அவை உதட்டில் ஈரப்பதத்தைத் தக்கவைத்து உதடு பொலிவுக்கு வித்திடும். ஸ்ட்ராபெர்ரி, ராஸ்பெர்ரி பழங்களை மசித்து, அதனுடன் தேன் மற்றும் கற்றாழை ஜூஸ் சேர்த்து உதட்டில் தடவிவிட்டு, ஐந்து நிமிடங்கள் கழித்து கழுவ வேண்டும். ஆலிவ் ஆயிலும் உதட்டு பொலிவிற்கு உதவும்.

# தமிழீழத் தமிழர்களின் குருதி இங்கிலாந்திடம் நீதி கேட்கிறது!

வணிகம் என்ற பெயரில் உலக நிலப்பரப்புகளையும் நீர்ப்பரப்புகளையும் ஆக்கிரமித்துக் கொண்ட இங்கிலாந்து, யார் யாரிடம் இருந்து, எந்தெந்தப் பகுதிகளை ஆக்கிரமித்ததோ அவைகளை, அவர்களிடமே திரும்பக் கொடுக்காமல் செய்த தவறின் விளைவு, பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இனப்படுகொலைக்கு ஆளானார்கள்.

தமிழர்களால் ஆட்சி, அதிகாரம் செய்யப்பட்டு வந்த தமிழீழப் பகுதியை ஆக்கிரமிப்பு செய்து, தங்களின் ஆட்சியின் வசதிக்காக ஒன்றிணைத்து, ஆண்டு, அனுபவித்துவிட்டு, எல்லாப் பகுதிகளையும் சிங்களவனிடம் கொடுத்துவிட்டு கப்பலேறிவிட்டனர். அந்தக் கெடு செயல் காரணமாகவே, இலங்கையில் நாங்கள் பெரும்பான்மையினர் நீங்கள் சிறுபான்மையினர் என்று தமிழர்களை இன்று வரை கொன்று வருகின்றனர் சிங்களர்கள்.

இலங்கையைப் பொறுத்தவரை வேண்டுமானால் தமிழர்கள் சிறுபான்மையாக இருக்கலாம். தமிழீழத்தைப் பொறுத்தவரை தமிழர்களே பெரும்பான்மையினர். ஆனால், சிங்களரின் இன அழிப்பு தொடர்ந்து கொண்டே இருந்தால் தமிழீழத்திலும் தமிழர்கள் சிறுபான்மையினராக ஆகிவிடுவார்கள். தமிழர்களின் நிலங்களில் புத்த ஆலயங்களும், சிங்களவர்களின் குடியேற்றங்களும் நித்தம் நித்தம் நடந்து வருகின்றன. ‘நிலம் எங்களுக்கு உரியது’ என்ற உறுதிப் பத்திரத்தை, ஆக்கிரமிப்பு, அயோக்கிய சிங்களரிடம் தமிழர்கள் காண்பித்தாலும், அது ஏற்றுக் கொள்ளப்படாமல் தமிழர்கள் நிலம் அற்றவர்களாக விரட்டப்படுகிறார்கள். இதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டியதும், அறத்தை காக்க வேண்டியதும், தமிழர்களின் உரிமையை மீட்டுத் தர வேண்டியதும் இங்கிலாந்து நாட்டின் கடமை.

குற்றமில்லாத தமிழர்கள் சிந்திய குருதி, இங்கிலாந்துக்காரர்களிடம் நீதியைக் கேட்கிறது. தாங்கள் செய்த தவற்றிலிருந்து தப்பிக்க, பன்னாட்டு மன்றத்தில் பேசி, தமிழர்களுக்குரிய நிலத்தை தமிழர்களிடமே ஒப்படைக்க இங்கிலாந்து நாடு முயற்சி எடுத்து நிறைவேற்ற வேண்டும். அறச்சீற்றம் பொல்லாதது. தமிழீழ மக்கள் அறச்சீற்றம் அப்படிப்பட்டதுதான். விடுதலை தமிழீழம் மட்டுமே அறச்சீற்றத்தைத் தணிக்கும் மருந்து.

**வேர்மகள்.**



# தமிழகத்தில் வறட்சி மாவட்டங்கள்!

தமிழக வருவாய், பேரிடர் மேலாண்மைத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா வெளியிட்டுள்ள அரசாணையில் கூறப்பட்டு இருப்பதாவது:

தமிழகத்தில் கடந்த ஆண்டு வடகிழக்கு பருவ காலத்தில் பெய்த மழையளவு பகுப்பாய்வு செய்யப்பட்டது. அதில் கோவை, கன்னியாகுமரி, தேனி, தூத்துக்குடி, நெல்லை, திருப்பூர், நீலகிரி ஆகிய ஏழு மாவட்டங்களில் உள்ள 38 வட்டாரங்கள் பற்றாக்குறை, மிகப் பற்றாக்குறை என்ற அளவில் மழைப்பொழிவைப் பெற்றுள்ளன.

அங்கு நிலத்தடி நீர் குறைந்திருப்பதால் கோடை காலத்தில் நீரியல் வறட்சி ஏற்படும். எனவே இந்த வட்டாரங்கள் வறட்சி வட்டாரங்களாக அறிவிக்கப்படுகின்றன.

அதுபோல மழைப்பொழிவை குறைவாகப் பெற்றுள்ள சென்னை, தர்மபுரி, கிருஷ்ணகிரி, கரூர், சேலம், வேலூர், திருச்சி, பெரம்பலூர், திருவள்ளூர், நாமக்கல், விருதுநகர், காஞ்சீபுரம், மதுரை, திண்டுக்கல், ஈரோடு, புதுக்கோட்டை, சிவகங்கை, தஞ்சை, விழுப்புரம், திருவண்ணாமலை, அரியலூர், நாகை, கடலூர், இராமநாதபுரம் ஆகிய 24 மாவட்டங்கள் நீரியல் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங் களாக அறிவிக்கப்படுகின்றன.

# குறுங்குழுவாதிகள், பாசிஸ்டுகள் என்று எங்களைத்தூற்றிய எட்டறிவு ஜீவன்களுக்கு



ஐம்பதுகளில் தந்தை பெரியார் அவர்கள் முன்னெடுத்த வடநாட்டு வணிக நிறுவனங்கள் முற்றுகை மற்றும் வடவர் எதிர்ப்பு போன்ற அரசியல் கோரிக்கைகள்!

இந்தியத்தில், இந்துத்தவாவில் ஊறிப்போன அன்றைய தகவல்கள் வாய்க்கொழுப்பெடுத்து பெரியாரைப் தூற்றினார்கள்.

பெரியார் அன்றே எதிர்காலத்தில் வரும் ஆழத்தை உணர்ந்துதான் வடவர் ஆதிக்கத்தை கடுமையாக எதிர்த்தார், வடவர் வணிக நிறுவனங் களை முற்றுகையிட்டு நின்றார்.

இதை கண்டித்து அன்றைய அரசியல் தலைவர்கள் பெரியாரை கேலியும், கிண்டலுமாக தூற்றினார்கள், சிறைப்படுத்தினார்கள்.

அதுபோல் அன்று குடகுப் நாட்டை தமிழகத் தோடு இணையுங்கள் என்று பெரியார் பேசியும், எழுதியும் போராடியும் வந்தார்.... பெரியாரின் சொல் கேட்டு அன்று குடகு பகுதியை தமிழகத்தோடு இணைந்து இருந்தால் இன்று நமக்கு காவிரி சிக்கலே இருந்திருக்காது, காவிரியும் கரைபுரண்டு ஓடி இருக்கும்.

ஆனால் தமிழ்நாட்டு தலைவர்கள் அன்று பெரியார் என்கின்ற சமூக விஞ்ஞானியின் பேச்சையும், போராட்டத்தையும் மதிக்கவில்லை, மாறாக வழக்கம்போல் அவரை தூற்றினார்கள்.

ஆனால் கர்நாடக அரசோ, படிக்காத காட்டு மிராண்டிகள்தான் குடகு மக்கள் எனவே அவர்களை கர்னாடகத்திற்குள் சேர்க்க மாட்டோம் என்று சட்டசபையிலேயே தீர்மானம் நிறைவேற்றினர். இதை கடுமையாக கண்டித்த ஒரு பொருளியியல் விஞ்ஞானிதான் விஸ்வேஸ்வரய்யா! எதவாக இருந்தாலும் பிறகு பார்த்துக் கொள்ளலாம், முதலில் குடகை கர்நாடகத்துடன் இணையுங்கள் என்று உத்தரவிட்டார். உடனே மறு பேச்சில்லாமல் அந்த பொருளியல் விஞ்ஞானியின் கருத்தை ஏற்று குடகை கர்னாடகத்துடன் இணைத்தார்கள்.

பெங்களூரு குடிநீருக்கும், இருபது லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பு விவசாய நிலமும் காவிரியால் செல்வச் செழிப்பாக மாறியுள்ளது.

இந்த இரண்டு சம்பவங்களும் வரலாற்றில் மிக முக்கியமான மறக்க முடியாத, மறுக்க முடியாத சம்பவங்கள்.

இதை முன்னுணர்ந்து சொன்ன பெரியாரை தமிழகத் தலைவர்கள் மதிக்கவும் இல்லை. ஏறெடுத்தும் பார்க்கவில்லை! அதன் பலனை இன்று நாம் அனுபவிக்கின்றோம். அதுபோல்தான் யாரும் கவனிக்கத் தவறிய அல்லது பாசிஸ்ட்டுகள் என்கின்ற முத்திரை விழுந்துவிடுமோ என்று பயந்தவடவர் எதிர்ப்பை! ஏறக்குறைய 60 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழக வாழ்வுரிமைக் கட்சி பெரியார் முன் எடுத்த வடவர் எதிர்ப்பு என்ற போராட்டத்தை அவசியம் கருதி முன்னெடுக்கிறது.

அதன் நியாயங்களும், அதன் ஆபத்துகளும் உணராத இன்றைய கத்துக்குட்டி மனித நேயர்களும், அரைகுறை முற்போக்காளர்களும், தமிழக வாழ்வுரிமைக் கட்சியை கடுமையாக விமர்சிக்கி றார்கள். இது பெரியாருக்கும் நிகழ்ந்தது தமிழக வாழ்வுரிமைக் கட்சிக்கும் நிகழ்கிறது.

தமிழர்களுக்கே உரித்தான உரிமையுள்ள தமிழகத்தில் இயங்கும் மத்திய அரசு நிறுவனங்களில் 90 விழுக்காட்டு வேலைவாய்ப்பை தமிழர்களுக்கே கொடு!

தமிழக அரசுப் பணிகளில் நூறு விழுக்காட்டை தமிழர்களுக்கே கொடு..!!

தமிழகத்தில் இயங்கும் தனியார் துறைகளில் 90 விழுக்காட்டு வேலைவாய்ப்பை அந்தந்தப்பகுதி மண்ணின் மைந்தர்களுக்கே வழங்கு!

தேசியக் கட்சிகள் தமிழகத்தில் வேர் பிடிக்கவும், ஒரு கலப்பு இனத்தை உருவாக்கவும், அரசியல் குழப்பத்தை விளைவிக்கவும், தமிழர்களுக்கே உரித்தான சிறு சிறு தொழில்களை ஆக்கிரமிக்கவும்..

திட்டமிட்டு மத்திய அரச வடவர்களை ஊக்கப் படுத்தி வருகிறது. தினந்தோறும் ஆயிரக் கணக்கான வட மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தமிழகத்தில் குடியேறி வருகிறார்கள்.

இது ஒரு தேசிய இனத்தில் 10 விழுக்காட்டிற்கும் மேல் பிற இனத்தவர்களை அனுமதிக்கக் கூடாது என்கின்ற உலக அளவிலான ஐ.நா. சபை வழிகாட் டுதலுக்கு எதிரான செயலாகும். எனவே தமிழகத்தில் குடிஏறியுள்ள வடவர்களை வெளியேற்றவும், அயல் மாநிலத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்காளர் அடையாள அட்டை, இருப்பிடச் சான்று, குடும்ப அட்டை போன்றவற்றை ரத்து செய்து, ஒட்டு மொத்த மக்கள் தொகையில் 10 விழுக்காட்டிற்கும் மேல் அன்னியர்கள் இல்லாதவாறு, பாதுகாப்பு உத்தரவாதச் சட்டம் இயற்றக் கோரி! தமிழக வாழ்வுரிமைக் கட்சி தொடர்ந்து போராடி வருகிறது.

தேர்தல் காலமோ, என்னவோ நல்வாய்ப்பாக அன்று பெரியார் முன் வைத்த வடவர் எதிர்ப்பு கோரிக்கையை, இன்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி முன்னெடுக்கின்ற வடவர் எதிர்ப்பு கோரிக்கையை திமுக உள்ளிட்ட பெரிய கட்சிகள் விழித்துக் கொண்டு குரல் கொடுப்பது தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் பிரச்சாரத்திற்கும், போராட்டத்திற்கும் கிடைத்த வெற்றி என்றே கருதுகின்றோம்.

எப்படி Go back modi, go back ipl என்பதை முதன் முதலில் முன் வைத்து தமிழகத்தின் தாரக மந்திர மாக்கினோமோ, தேசத்தின் ஒட்டு மொத்தக் குரலாக மாற்றினோமோ அதுபோல் ..

சமீபத்தில் தேசியக் கட்சியான, நேற்று வரை ஒரே இந்தியா என்கின்ற முழக்கத்தை முன்வைத்த, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியில் இருந்துகூட வடவர் எதிர்ப்பு குரல் ஓங்கி ஒலிக்க துவங்கியிருக்கிறது.

பல்வேறு பத்திரிக்கைகள் வடவர் ஆதிக்கம் தொடர்பாக சிறப்பு கட்டுரைகளும், தலையங்கமும் எழுதி வருவது...தமிழக வாழ்வுரிமைக் கட்சிக்கும், அதன் தலைவர் சமூக நீதிப் போராளி தி.வேல் முருகன் அவர்களுக்கும் கிடைத்த மகப்பெரிய வெற்றியாகும்.

ஒரு தலைவனின் சிந்தனையை, மக்கள் கருத்தாக மாற்றுவதும், பிற கட்சிகளையும் தனது கருத்திற்கு இணங்க இசைவாக பேச வைப்பதும், தான் மட்டும் போராடாமல், பிறரையும் தன் கருத்துக்கு வலு சேர்க்க போராட தூண்டுவதும்தான் ஒரு இயக்க வாதிக்கு அழகு என்பதை மீண்டும் தமிழக வாழ்வுரி மைக் கட்சி களத்தில் நிரூபித்திருக்கிறது.

வடவர் எதிர்ப்பு என்கின்ற இந்த ஒரு கோரிக்கையிலாவது அனைவரையும் ஒரு புள்ளியில் நாங்கள் இணைக்கின்றோம் என்பது தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் பயணத்தில் ஒரு மைல் கல். ●


## விளம்பர கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ. 7,000/- (முழுப்பக்கம்)**

**பின்னட்டை உள்ளே ரூ. 7,000/- (முழுப்பக்கம்)**

**பின்னட்டை ரூ. 10,000/- (முழுப்பக்கம்)**

**கருப்புவெள்ளை ரூ. 5,000/- (முழுப்பக்கம்)**

மருத்துவம்

# வேண்டியவை, வேண்டாதவை!



1. அழகு முகத்திற்கு ஆரஞ்சும் ஆப்பிளும்.
2. கண்களின் காப்பிற்கு காரட்டும், கறிவேப்பிலையும்.
3. காலை காபி நரம்புகளுக்குக் கெடுதி.
4. பளபள மேனிக்கு பப்பாளி
5. வெந்து கெட்டது முருங்கை – வேகாமல் கெட்டது அகத்தி.
6. ஈரெட்டு வயதை நீட்டிக்கும் குமரி, நெல்லி.
7. சளி, இருமலை அதிகரிக்கும் மாட்டுப்பால்
8. உப்பு, வெள்ளை சர்க்கரை ஆரோக்கியத்தின் எதிரிகள்
9. உடல் உறுதிக்கு தேங்காய்ப்பால்
10. தங்கமேனிக்கு ஆவாரம்பூ
11. வயிற்றுக்கு மாதுளை, நெஞ்சுக்கு தூதுவளை
12. சமைத்த உணவு தவறான உணவு
13. மலச்சிக்கலுக்கு மாம்பழம், மாலைக்கண்ணை விரட்டும்.
14. ஆஸ்துமாவிற்கு எதிரி ஆரஞ்சும், அன்னாசியும்.
15. நாவல், நெல்லி, கூட்டணி நீரிழிவை விரட்டிடும்.
16. பசிக்காத உணவு குப்பை உணவே.
17. பசிக்கால் புசிப்பவன் மனிதன் மட்டுமே.
18. நோய்களின் தாய் சமைத்த அமில உணவுகளே.
19. வசம்பு நமது மூலிகைத்தாய் – கடுக்காய் நமது இரண்டாவது தாய்.

20. தரையில் தவழும் நிலக்கீரைச் செடிகள் காலனை விரட்டும்.

21. நின்று கொண்டு நீர் அருந்தக் கூடாது.

22. அசையாத பருமன் உடலும் நெல்லியால் நடக்கும் – ஆப்பிளால் ஆடும் – பப்பாளியால் ஓடும்.

23. தக்காளியால் சூண்டு அன்பர்கள் கட்டழகு பெறலாம்.

24. பாலும் சமைத்த கீரையும் நஞ்சு – தேனும் நெய்யும் அளவு நஞ்சு.

25. தேனும் முட்டையும் நஞ்சு – தேனும் சீனியும் சம அளவு நஞ்சு.

26. முள்ளங்கியும் உளுந்தும் நஞ்சு – மீனும் பாலும் நஞ்சு

27. மணத்தக்காளியும் மிளகும் நஞ்சு – தயிரும் வெங்கலப் பாத்திரமும் நஞ்சு

28. தொப்பைக்கு எதிரி தக்காளி, தர்பூசணி.

29. வயிற்றின் நட்புணவுகள் வெள்ளரியும் வெந்தயமும்.

30. முதுகு தண்டுக்கு முருங்கை, பப்பாளி.

31. அமிர்த உணவுகள் தேங்காய், மாதுளை.

32. நெல்லி, கறிவேப்பிலை, முருங்கை, வெந்தயம் உண்பவர்கள் தனக்குத்தானே மருத்துவர்.

33. வாரம் ஒருநாள் இயற்கைச்சாறுகள், மாதம் இரண்டு நாட்கள் நோன்பு – உங்கள் ஆயுளை பத்து வருடம் நீடிக்கும்.

34. அளவுக்கு மீறினால் உணவே நஞ்சு.

35. தினசரி ஒரு பிடி கரிசாலை நரை திரை மாறும்.

36. தோல் வியாதிகளுக்கு நண்பன் கத்திரிக்காய்.

37. இரத்த விருத்திக்கு செம்பருத்தி – மூட்டுவலிக்கு முடக்கற்றான்.

38. குடற்புழுக்களுக்கு வேப்பங்கொழுத்து – சளிக்கு கற்பூரவல்லி.

39. கொழுப்புக்கு  எதிரி வெங்காயம், இஞ்சி, பூண்டு

40. இரத்த அழுத்தத்திற்கு மிளகு, வெந்தயம்.

41. கல்லடைப்புக்கு வாழைத்தண்டு – வரட்டு இருமலுக்கு உலர்ந்த திராட்சை.

42. நினைவாற்றலுக்கு வல்லாரை – சித்தம் தெளிவிற்கு மஹா வில்வம்.

43. மூளைக்கு வாழைப்பழம், வல்லாரை, பேரீட்சை, உலர் திராட்சை, வெண்டைக்காய்.

44. பைத்தியம் தெளிய வெண்பூசணி, பேய்ச்சுரக்காய்

45. வெட்டுக்காயத்திற்கு வசம்பு, தேன்.

46. புற்றுநோயை தடுக்கும் மஞ்சள், வெண்பூசணி, சீத்தாப்பழம், கோதுமைப்புல் சாறு

47. மூல நோய்க்கு அத்திக்காய், கருணைக்கிழங்கு

48. தலைப்பேனுக்கு மலைவேம்பு – உடல் காய்ச்சலுக்கு நிலவேம்பு.

49. தாய்ப்பால் பெருக பூண்டு, வெந்தயம், முருங்கை

50. சொரி, சிரங்குக்கு வேப்பிலை, மஞ்சள், குப்பைமேனி.

51. குஷ்ட நோய்க்கு வேப்பம்பிசின் – புற்றுநோய்க்கு வேப்பிலை.

52. வயிற்று புண்ணுக்கு மணத்தக்காளி – பல்வலிக்கு பப்பாளி

53. சுகப்பிரசவத்திற்கு குங்குமப்பூ, தேன், பிரண்டை

54. சர்க்கரை நோய்க்கு பாகற்காய் – சிறுநீரகத்துக்கு சிறுகீரை

55. சிற்றின்பத்துக்கு சிறுபசலை – தாது விருத்திக்கு முருங்கை

56. குடற்புழுக்களுக்கு பாகற்காய், வேப்பிலை, சுண்டைக்காய், கடுக்காய்.

57. பித்த வெடிப்புக்கு வேப்பெண்ணெய் – மஞ்சள், விளக்கெண்ணெய், சுண்ணாம்பு

58. நெஞ்சு சளிக்கு சுண்டைக்காய் – நரைமுடிக்கு தாமரைப்பூ

59. வயிற்று கடுப்புக்கு கேழ்வரகு மாவு – சர்க்கரை

60. உடல் அசதிக்கு கோதுமை மாவுக் கஞ்சி

61. பிள்ளை பெற்றவளுக்கு அரைகீரை – உட்புண்களுக்கு கடுக்காய்

62. வாய்ப்புண்ணுக்கு கொய்யா இலை – வயிற்றுப்புண்ணுக்கு மணத்தக்காளி இலை

63. திக்குவாய்க்கு வில்வம் – நாக்குப் புண்ணுக்கு பப்பாளிப்பால்

64. குதிகால் வலிக்கு எருக்கு – இரத்த விருத்திக்கு அருகு

65. சளிக்கு துளசி – பித்தத்திற்கு வில்வம்

66. மஞ்சள் காமாலைக்கு கீழாநெல்லி – நரம்புகளுக்கு வல்லாரை

67. புரையோடிய புண்ணுக்கு அத்திப்பால், கருவேலங்கொழுந்து

68. அகத்தின் தீயை அணைக்கும் அகத்தி

69. சர்க்கரை நோய்க்கு ஆவாரம்பூ, பாகற்காய்

70. விஷப்பூச்சி, ஜந்துக்களின் விஷமுறிவுக்கு சிறியா நங்கை.

**உமா மகேசுவரி.**

Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**




Jaladhi foundation 4th event " Awareness program for health and nutrition" for women held at GRT institute of engineering and technology on 22-02-2019 at 3:00 to 4:00 PM comprised of Chief Guest Dr. Hemavathi MBBS, BGO,ChairmenJaladhi Uma sankar  Triple M.A, Board of executive director Dr.P. RenukaB.H.M.S,Treasurer K. Kalaithendral M.E and college students.




Jaladhi foundation 5th event "Stress management, suicide prevention and mental health awareness " The program conducted for the students of Government Higher secondary school, Chivada  accompanied with  the Chief Guest Dr. C.S. Sakunthala Devi MBBS., DPM., - Psychiatrist,  Chairman Jaladhi Uma sankar,  Triple MA, Special Guest S. Gopalakrishna Rao M.Sc., M.Ed., M.Phil., - Head master,Treasurer K. KalaiThendral M.E.




Jaladhi foundation 6th event "Voters awareness campaign on EVM & VVPAT" rally  conducted for awareness of election and responsibility of every citizen as voter in thiruvallur district.

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

